விலை: 30.00
பக்கங்கள் : 16
website : www.valampuri.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 040 வள்ளுவர் ஆண்டு 2053 தை 15 வெள்ளிக்கிழமை (28.01.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

அதிக பனி காரணமாக
## மூச்சுவிட சிரமப்பட்ட ஒரு வயது குழந்தை மரணம்
சுதுமலையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
அதிக பனி காரணமாக மூச்சு விட சிரமப்பட்ட ஒரு வயது பெண் குழந்தை 15


தமிழ்க் கட்சிகளின்
## ஊடக சந்திப்பு யாழில் இன்று

(யாழ்ப்பாணம்)
இந்தியப் பிரதமருக்கான ஆவணத்தில் ஒப்பமிட்ட ஆறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் 15

## அல்வாயில் வீடு புகுந்து 19 பவுண் நகை திருட்டு

(கரணவாய்)
அல்வாய் கிழக்கில் அதி காலை வேளையில் வீடு திறந் திருந்ததனை சாதகமாகப் பயன் படுத்தி வீட்டுக்குள் நுழைந்து 19 பவுண் தங்க நகை, 65 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பணம் என்பன திருடிச் செல்லப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப் 15

சர்வதேச நியதிகளுக்கு அமைவாக
# பயங்கரவாத சட்டம் திருத்தப்படுகின்றது
வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்



(கொழும்பு)
சர்வதேச நியதிகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தப்பட்டு வருகின்றதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

கொரோனா
## 23 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் மேலும் 23 கோவிட் - 19 மரணங்கள் பதி வாகியுள்ளன. 15

நாட்டில் மேலும்
## +942 பேருக்கு தொற்று


(கொழும்பு)
கொரோனா தொற்று உறுதி யான மேலும் 942 பேர் நேற்று அடை 15

## நெருக்கடிகளிலிருந்து மீள்வதற்கு பிரேரணை
அரசின் பங்காளிகள் தீர்மானம்

(கொழும்பு)
நாடு எதிர்நோக்கும் பாரிய நெருக்கடிகளில் இருந்து மீள் வதற்கான பிரேரணை ஒன்றை சமர்ப்பிக்க அரசாங்கத்தின் பத்து பங்காளிக் கட்சிகளின் தலை வர்கள் தீர்மானித்துள்ளனர்.
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி யின் தலைமையகத்தில் அர சாங்கப் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் இடம் பெற்ற கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பான தீர்மானத்தை இன்று அல்லது நாளை ஜனாதி பதி மற்றும் பிரதமரிடம் கைய ளித்த பின்னர், மக்கள் தெரிந்து கொள்வதற்காக அதை பகிரங் கப்படுத்தவும் கட்சித் தலைவர்கள் முடிவு 15

## ரொட்டித் துண்டு கொடுத்து தமிழர்களை வாங்க கோட்டா நினைக்கிறார்
விக்னேஸ்வரன் காட்டம்
3 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய - இலங்கை மக்களுக்கிடையிலான உறவுகள் மேலும் வலுப்பெறும்
இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி



(புதுடில்லி)
இந்திய - இலங்கை மக் களுக்கு இடையிலான உறவுகள் மேலும் வலுப்பெறும் என இந்தி யப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
இந்தியாவின் 73ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அந்நாட்டு மக் 15

## முல்லை பாண்டியன்குளத்தில் மோ.சைக்கிள் விபத்து
ஒருவர் உயிரிழப்பு

(முல்லைத்தீவு)
முல்லைத்தீவு - பாண்டியன் குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் அநுராதபுரம் பகுதி யைச் சேர்ந்த ரவீந்திர நிக்கசீல (வயது-47) என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரி ழந்துள்ளார். 15

நாட்டை மீண்டும் முடக்காமல்
## கொரோனா வைரஸை கட்டுப்படுத்த முயற்சி

(கொழும்பு)
"நாட்டை மீண்டும் முடக்கா மல் வைரஸ் பரவலைக் கட்டுப் படுத்தவே முயற்சிக்கின்றோம். இதற்குப்பொதுமக்கள்முழுமை யான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சுகாதார நடைமுறைகளைப் 15

## பலரின் போலி முகங்களை காட்ட மாகாண சபைத் தேர்தலில் போட்டி
கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



(யாழ்ப்பாணம்)
மக்களுக்கு பலரின் போலி முகங்களைக் காட்டுவதற்காக, மாகாண சபைத் தேர்தலை எதிர் கொள்வோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய கஜேந்திர குமார் பொன்னம்பலம் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நாட்டில் கொரோனா அதிகரித்துள்ள நிலையில்
# இலங்கை வரும் வெளிநாட்டவர்களுக்கான புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு

(கொழும்பு)

கோவிட் பரவலுக்கு மத்தியில் நாட்டிற்கு வருகைதரும் வெளிநாட்டவர்களுக்கான புதிய சுகாதார வழிகாட்டல்களை சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ளது.

புதிய வழிகாட்டுதல்களின்படி, கோவிட் நோய்க்கு எதிரான ஒரு தடுப்பூசியைப் பெற்ற, கடந்த ஆறு மாதங்களில் கோவிட் நோயால் பாதிக்கப்பட்ட இரட்டை பிரஜாவுரிமை கொண்டவர்கள் உட்பட இலங்கை வரும்அனைத்து வெளிநாட்டவர்களும் முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களாக கருதப்படுகிறது.

மேலும், நாட்டிற்கு வந்தவுடன் விமான நிலையத்தில் நடத்தப்படும் பி.சி.ஆர் பரிசோதனையின்போது 30க்கும் குறைவான சீ.ரி பரிசோதனை முடிவுகளைக்கொண்ட சுற்றுலாப் பயணிகள் மற்றும் இலங்கையர்கள் 7 நாட்கள் சுய தனிமைப்படுத்தப்பட்ட காலத்திற்கு இணங்கி விமான நிலையத்தை விட்டு வெளியேற முடியும்.

மேற்படி பெறுபேறுகளை கொண்டவர்களின் வீட்டில் தனிமைப்படுத்தலுக்கு தேவையான அனைத்து வசதிகளும் இருந்தால் மட்டுமே அவர்கள் விமான நிலையத்திலிருந்து விடுவிக்கப்படுவார்கள்.

மேலும், முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்ட பெற்றோருடன் வருகைதரும் 12 வயதுக்குட்பட்ட பிள்ளைகள், கொவிட் பரிசோதனையில் இருந்து முற்றிலும் விடுவிக்கப்படுவர்.

மேலும் 12 முதல் 18 வயதுக்குட்பட்ட, ஒரே ஒரு பைஸர் தடுப்பூசி செலுத்தியுள்ள சிறுவர்கள் தங்களுக்கு தமது பெற்றோருடன் வெளியேற வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதிக ஆபத்துள்ள நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளுக்கான தனிமைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அவர்களது அறிக்கைகளுக்கு அமைய தீர்மானிக்கப்படும் என்றும் இந்த புதுப்பிக்கப்பட்ட வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, அவர்களின் தனிமைப்படுத்தல் காலம் 7 முதல் 14 நாட்கள் வரை மாறுபடும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## புதிய விகாரமடைந்த கொரோனாவை கட்டுப்படுத்தும் சக்தி எம்மிடமுண்டு

### சுகாதார அமைச்சர் கெஹலிய



(கொழும்பு)

உலகளாவிய ரீதியில் கொரோனாத் தொற்று தீவிரமடைந்து வரும் நிலையில், எந்தவொரு புதிய விகாரமடைந்த கொரோனா வைரசையும் கட்டுப்படுத்தும் சுகாதார கட்டமைப்பை இலங்கை கொண்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

ஆகையினால், நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பு எந்த வகையிலும் வீழ்ச்சியடையாமல் இருப்பதை உறுதி செய்ய முடியும் என சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

இலங்கையில் அண்மைய நாட்களில் கொரோனா தொற்று, பரவல் அடைந்துவரும் நிலையில், போதிய படுக்கை வசதிகள் மற்றும் ஒக்சிஜன் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்த சுகாதார அமைச்சர், சில தரப்பினர் தவறான கருத்துக்களை வெளியிட்டுள்ள போதிலும் எந்வொரு சூழலையும் எதிர்கொள்ளும் திறனை சுகாதார துறை கொண்டுள்ளதாக கூறியுள்ளார்.

சிறந்த மட்டத்தில் சுகாதாரக் கட்டமைப்பை செயற்படுத்த, முடியுமான திறன் காணப்படுவதாகவும், எந்தவொரு குறைபாடுகளும் இன்றி பொதுமக்களுக்கான சேவையை வழங்க முடியும் எனவும் சுகாதார அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ம)


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் சுன்னாகம் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வீதியில் மெயின் றோட்டில் இரண்டாவது காணி கண்ணகை அம்மன் கோவில் வீதியில் 8 ½ பரப்புக் காணி 2 பரப்பாகவும் 1 ½ பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்குண்டு.

**(சுன்னாகம் பஸ் நிலையத்திலிருந்து 2.5 Km தூரம்)**

தொடர்பு:-

**077 658 5999**

(9880)


# தனிமைப்படுத்தல் காலம் தொடர்பில் சுகாதார அமைச்சின் புதிய அறிவிப்பு

(கொழும்பு)

வீட்டில் சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் கோவிட் நோயாளர்களுக்கு, தொற்றுறுதியாகி ஏழு நாட்களின் பின்னர், நோய் அறிகுறி இல்லையாயின், அவர்கள் வீட்டுத் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்படலாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்ட தனிமைப்படுத்தல் தொடர்பான அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கோவிட் தொற்றுக்கு உள்ளாகி 7 நாட்களுக்குள், இறுதி 48 மணிநேரம் எந்த மருந்தையும் அருந்தாமல் காய்ச்சல் ஏற்படவில்லை என்றால், அவர்கள் பி.சி.ஆர் அல்லது அண்டிஜன் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய அவசியமில்லை என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கோவிட் தொற்றாளரின் முதல் தொடர்பாளர், முழுமையாக தடுப்பூசி பெற்றிருந்து, கோவிட் அறிகுறிகள் எதனையும் கொண்டிராத பட்சத்தில், அவர் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக வேண்டிய அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் (முதல் தொடர்பாளர்) பணிபுரியும் நபராக இருந்தால், தொடர்ந்தும் பணிகளை முன்னெடுத்து செல்ல முடியும்.

எனினும் அவருக்கு கொவிட் அறிகுறிகள் வெளிப்படுமாயின் அவர் கட்டாயமாக கொவிட் பரிசோதனைக்கு உள்ளாக வேண்டும் என சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ம)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 06 . 05 . 1964



இறப்பு 16 . 12 . 2021

(C-3649)

கடந்த 16.12.2021 அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர் **கோவிந்தசாமி கஜேந்திரராசா**

( கஜன் )

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (29.01.2022) சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஊறணி மடத்திலும் அதனைத் தொடர்ந்து வீட்டிலும் நடைபெறும். அத்தருணம் தங்கள் அனைவரையும் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எம்தந்தையின் துயரச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி, முகநூலிலும் ஆறுதல் கூறியும் மற்றும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

நன்றி

076 328 6190

குடும்பத்தினர்


## காணி விற்பனைக்குண்டு

யாழ்ப்பாணம் அச்சுவேலி பத்தமேனி பகுதியில் 18 பரப்புக் காணி 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

**1 பரப்பின் விலை - 3.5 லட்சம்**

**(மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய்)**

**15 அடி பாதையுடன்,**

**காபற் றோட், நல்ல சூழல், நிலப்பரப்பு**

**(அச்சுவேலி பஸ் நிலையத்திலிருந்து 2 Km தூரம்)**

(அச்சுவேலியிலிருந்து பலாலி செல்லும் வீதியில் தோலகட்டி கம்பனி முன்வீதியில்)

தொடர்பு:-

**076 890 9259, 077 015 0353**

(9879)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

### வாடகை அடிப்படையில் வாகனம் பெறுவதற்கான கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அலுவலகப் பயன்பாட்டிற்கு 01.01.2015இற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வான் ரக வாகனம் ஒன்றினை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன,

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, யாழ்.வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ (021 225 6650) பெற்றுக்கொள்ள முடியும். மேலும் 28.01.2022 ஆம் திகதி தொடக்கம் 10.02.2022ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 2.30 வரை நிதிக் கிளையில் ரூபா.1000.00 (மீளப்பெறாத தொகையினை), கேள்விப்பிணை ரூபா.10,000.00 (மீளப்பெறத்தக்க தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 11.02.2022 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விதாரர் அல்லது வருகைத்தரும் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

தலைவர்,
பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
யாழ். வீதி, மானிப்பாய்.

28.01.2022

(C-3653)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை ஒரு ரொட்டித்துண்டைக் கொடுத்து வாங்கிவிடலாம் என நினைக்கின்றார் ஜனாதிபதி

## பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் காட்டம்

(யாழ்ப்பாணம்)

- பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க வேண்டும்!
- அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய்ய வேண்டும்!
- தொல்பொருள் திணைக்களம், வனவளத் திணைக்களம், வனஜீவ ராசிகள் திணைக்களம் என்பன வடக்கு-கிழக்கில் நடத்தி வரும் இன கலாசார அழிப்பின் மூலம் வரலாற்றை பிறழ்வாக எழுத எத்தனிக்கும் செயற்பாடுகளை உடன் நிறுத்த வேண்டும்!



உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதிக்கு மனமிருந்தால் இந்த விடயங்களை உடனடியாக செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை உரை தொடர்பாக அண்மையில் நடைபெற்ற கருத்துப் பரிமாற்றத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

3000 வருடங்களுக்கு மேலான கலாசாரத்தையும் நாகரிகத்தையும் கொண்ட வடகிழக்கு தமிழர்களை ஒரு ரொட்டித் துண்டைக் கொடுத்து வாங்கிவிடலாம் என ஜனாதிபதி நினைக்கின்றார். அரச படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டு, இருக்கும் சொற்ப அரசியல் உரிமைகளையும் பறி கொடுத்து, பயமுறுத்தல்களுக்கு ஆளாகி இருக்கும் போது அவர்களைப் பட்டினி கிடக்க வைத்து திக்குமுக்காடச் செய்தால் தமது உரிமைகளை ஒரு பானைக் கஞ்சிக்கு அடகு வைக்கக் கூடியவர்கள் எம் மக்கள் என்று நினைக்கின்றார் ஜனாதிபதி. அவரின் அரசியல் அனுபவமின்மை இதிலிருந்து புலப்படுகின்றது.

படித்த பண்புடைய சிங்களவர்கள் உட்பட உலகத்தவர் யாவரும் இன்று இலங்கை இவ்வாறாக என்றுமில்லாத ஒரு வங்குரோத்து நிலையை அடைய தீர்க்கப்படாத இனப்பிரச்சினையே காரணம் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

நாட்டின் வருமானத்தில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்கு இன்று கூட பாதுகாப்புக்கும் அரச படைகளைத் திருப்திப்படுத்தவுமே பாவிக்கப்படுகின்றது. 30 வருடப் போரானது எமது பெரும்பான்மையினத் தலைவர்கள் இனப் பிரச்சினையைத் தீர்க்க முன்வராததாலேயே நிகழ்ந்தது. அப்படியிருந்தும் ஜனாதிபதி இந்நாட்டில் ஒரு இனப் பிரச்சினை இருப்பதை ஏற்க மறுத்து தமிழர்களுக்கு இருப்பது பொருளாதாரப் பிரச்சினை ஒன்றே என்கின்றார்.

நாடு சுதந்திரம் பெற்ற நாள் முதல் இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்கள் துயருற்றிருக்கின்றார்கள் என்பதில் சந்தேகம் ஏதும் இருக்க முடியாது. சுதந்திரத்திற்கு முன்பிருந்தே வடகிழக்குக் காணிகளை அபகரிப்பது என்பது தொடக்கம் பெற்றுவிட்டது. அடுத்து இந்த நாட்டின் செழுமைக்கு உழைத்த இந்த நாட்டின் தமிழ் பேசும் மக்களின் ஒரு பகுதியினர் வாக்குரிமை அற்றவர்கள் ஆக்கப்பட்டார்கள்.

1956 இல் மிக அருகிய தொகை கொண்ட சிங்களவர் வாழ்ந்த பொதுவாகச் சிங்களம் பேசப்படாத இடங்களில் எல்லாம் சிங்களமொழி திணிக்கப்பட்டது.

அப்போதைய அரசாங்கத்தின் பக்கச் சார்பான சட்டங்களுக்கு எதிராகத் தமிழ் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கிய போது வடமாகாணம் இராணுவ மயமாக்கப்பட்டது. தமிழ் மாணவ,மாணவியர் மேற்படிப்புக்கு செல்வதைத் தடுக்கும் விதத்தில் உயர் கல்விப் பரீட்சைகளில் சமன்படுத்தல் முறை கையாளப்பட்டது. அது மட்டுமல்லாது காலத்திற்குக் காலம் குழந்தைகளை அநியாயமாகக் கொன்றும், பெண்களைப் பலாத்காரம் செய்தும் மற்றவர்களைக் கொன்று குவித்தும் நடத்தப்பட்ட கொலைக் கலவரங்கள் ஏராளம்.

இதன் காரணத்தால் பாதிக்கப்பட்டோரின் குடும்பங்கள் நாட்டைவிட்டு வெளியேறி புகலிடங்களைத் தேடிக் கொண்டனர். இவ்வாறான செயல்கள் யாவும் தொடர்ந்து வந்த அரசாங்கங்களால் அரங்கேறிய போது அவ் அரசாங்கங்கள் சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சம்பந்தமான சர்வதேச உடன்பாட்டின் ஏற்பாடுகளையும், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாட்டின் ஏற்பாடுகளையும் மீறி விட்டிருந்தன. முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற இனப் படுகொலை அவற்றின் தொடர்ச்சியே!

தற்போதும் இவ்வாறான சர்வதேச சட்ட ஏற்பாடுகளின் மீறல்கள் வடக்கு-கிழக்கில் நடந்தேறிய வண்ணமே இருக்கின்றன. உரிய காணியேற்பு நடைமுறைகளைப் பின்பற்றாமல் படையினர் உதவியுடன் அரச திணைக்களங்கள் தனியார் காணிகளைக் கையேற்றல், வட கிழக்கு வளங்களை முகவர்கள் ஊடாகவும் கூலிகள் ஊடாகவும் சூறையாடுதல், தமது பாரம்பரிய வாழ்விடங்களில் இருந்து தமிழரை விரட்டிவிட்டு மாகாணங்களுக்கு வெளியில் இருந்து கொண்டு வந்து பிற மக்களைக் குடியேற்றுதல், எமது மீனவர்கள் தமது பாரம்பரிய இடங்களில் மீன்பிடிப்பதை தடுத்து அவர்களின் வாழ்வாதாரங்களை அழித்தல், வடமாகாணத்தில் மட்டும் 65,000 ஏக்கர்களுக்கு மேற்பட்ட அரச காணிகளைக் கையேற்று அவற்றில் படையினர் தொடர்ந்து வசித்து வர இடமளித்தல் போன்ற யாவையுமே மேற்கூறிய சர்வதேச உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு முரணானவை. இவை இன்றும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கின்றன.

இவை யாவும் நடந்தேறுவதை ஏற்றுக் கொள்ளாமல் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய எங்களை அவருடன் சேர்ந்து பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபடுமாறு கோருவது. மேற்கூறிய சட்ட விரோதச் செயல்கள் இனியும் கட்டாயமாக வட கிழக்கில் தொடரப் போகின்றன என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. அதுமட்டுமல்லாது கூடிய வேகத்துடனும் விசையுடனும் இவை தொடர இடமுண்டு.

இந்த அரசாங்கம் எம் மக்கள் மீது உண்மையான கரிசனை கொண்டு அவர்களுக்கு தேவையான பொருளாதார செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த முன்வந்தால் நாங்கள் அரசாங்கத்துடன் சேர்ந்து எமது மக்கள் நலன் சார்ந்து செயற்றிட்டங்களை செயற்படுத்த எம்மாலான உதவிகள் அனைத்தையும் செய்வோம்.

ஆனால் எமது மக்களின் அரசியல் ரீதியான எதிர்பார்ப்புக்களை புறக்கணித்து ஜனாதிபதியுடன் சேர்ந்து ஒட்டுறவாடி எம்மக்களின் முதுகில் குத்த நாம் முன்வருவோம் என்று ஜனாதிபதி எண்ணக்கூடாது.

ஜனாதிபதி முதலில் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களின் நம்பிக்கையைப் பெற முயற்சிக்க வேண்டும். அதாவது தனது குறிக்கோள்கள் உள்ளெண்ணங்கள் என்ன என்பதை எம்மக்களுடன் பகிர்ந்து அவர்களின் நம்பிக்கையை அவர் முதலில் பெற வேண்டும்.

இதனை ஒரு சாட்டாக வைத்து தனக்கிருக்கும் தற்போதைய பொருளாதார பிரச்சினைகளில் இருந்து தப்பவும் சர்வதேச நாடுகளில் எழுந்துள்ள மனிதவுரிமைகள் மீதான சர்ச்சைகளை முடிவுக்குக் கொண்டு வரவும் ஒரு ஆயுதமாக இதைப் பாவிக்கக் கூடாது என அவர் தெரிவித்தார். (நி)

# உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டையை பெறாத பரீட்சார்த்திகள் பதிவிறக்கம் செய்யலாம்

## பரீட்சைத் திணைக்களம் அறிவுறுத்து

(கொழும்பு)

2021 க.பொ.த. உயர்தரப் பரீட்சை அனுமதி அட்டையை இதுவரை பெறாத பரீட்சார்த்திகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்கு சென்று அதை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்று பரீட்சை திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

2021 க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள பாடசாலைகள் மற்றும் தனியார் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர் அனுமதி அட்டையைப் பெறவில்லை என்றால், www.doenets.lk என்ற இணையத்தளத்தில் சரியான தேசிய அடையாள அட்டை எண் அல்லது குறியீட்டு எண்ணை உள்ளிட்டு அனுமதி அட்டையின் நகலை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். (நி-5)

# மருத்துவமனைகளில் இடமில்லை என்பதில் உண்மையில்லை

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கொழும்பு)

மருத்துவமனைகளில் தற்போது சிகிச்சையளிப்பதற்கான இடவசதி இல்லை எனப் பரப்பப்படும் தகவல் உண்மைக்குப் புறம்பானது என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

அத்துடன் மருத்துவமனைகளில் பிராணவாயுவின் தேவை தற்போதைய அளவைவிட அதிகரிக்கவில்லை எனவும் கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விராட் கோலிக்கு ஓய்வு தேவை-ரவி சாஸ்திரி



விராட் கோலி கப்டன் பதவியில் இருந்து விலகியதில் இருந்து அவரை குறித்து சர்ச்சைகளும், விமர்சனங்களும் தொடர்ந்து எழுகின்றன. விராட் கோலி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாதற்கு அவருக்கு இந்திய அணி நிர்வாகம் தரும் அழுத்தமே காரணம் என பலரும் கூறி வருகின்றனர்.

இந்நிலையில் விராட் கோலி கண்டிப்பாக 2-3 மாதங்கள் ஓய்வு எடுக்க வேண்டும் என முன்னாள் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவித்தார்.

இது குறித்து அவர் கூறியதாவது,

விராட் கோலிக்கு 33 வயது தான் ஆகிறது. அவர் இன்னும் 5 வருடங்கள் சிறந்த கிரிக்கெட் வீரராக வலம் வரலாம். அவர் வெளியே வரும் பிரச்சினைகளை மறந்துவிட்டு, அமைதியுடன் பட்டிங்கில் கவனம் செலுத்த வேண்டும். அவர் போட்டிகளில் இருந்து 2-3 மாதங்கள் ஓய்வு எடுத்து வந்தால் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியும் என நான் கருதுகிறேன் என அவர் தெரிவித்தார். (4-6)

# மலிங்கவிற்கு புதிய பதவி!



அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணியின் பந்துவீச்சு மூலோபாய பயிற்றுவிப்பாளராக முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா கிரிக்கெட் சபை இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளது.

ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணி அவுஸ்திரேலியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை இந்தத் தொடர் இடம்பெறவுள்ளது. (4-6)

# இங்கிலாந்திற்கு பதிலடி கொடுத்தது மே.தீவுகள்



இங்கிலாந்து அணிக்கெதிரான மூன்றாவது இருபது-20 போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி 20 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

அணி சார்பாக றோவ் மன் பவல் 107 ஓட்டங்களையும் நிக்கோலஸ் பூரன் 70 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து 225 என்ற வெற்றியிலக்கினை நோக்கி துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்று 20 ஓட்டங்களினால் தோல்வியடைந்தது.

இங்கிலாந்து அணி சார்பாக டொம்பொன்ரன் 73 ஓட்டங்களையும், பில் சல்ட் 57 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

இந்த வெற்றியின் ஊடாக ஐந்து போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி இரண்டிற்கு ஒன்று என்ற அடிப்படையில் முன்னிலை பெற்றுள்ளது. (4-6)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2497

### பானுமதி

பீஸ் கட்ட பணம் கேட்டியே எப்ப கட்டனும்...!




எனக்கு தெரியும் டா நீ எதுக்கு பணம் கேட்குறாய்னு

### கேதீஸ்வரா

உலகம் அழகாக மாறுவது பதுக்கப்படும் பணத்தால் அல்ல



கொடுக்கப்படும் குணமுடைய மனிதர்களாலேயே

### தர்சினி

அனல் மேலே கரித்துணி கரித் துணியா...?



அனல் மேலே பனித்துளி தானேடா வரும்

### பிரவீன்

நமக்கு மட்டும் தான் இரண்டு நாளா ஜுரம், ஜலதோசம், உடம்பு வலியா இருக்கா



இல்ல ஊர்ல இருக்க எல்லாரும் இப்படி தான் இருந்தும் இல்லாதா மாதிரி இருக்காங்களா

### திபூசி

மனேஜர் : ஏன் லேட்?

கிளார்க் : சமையல் செய்து மனைவி சேலையை துவைத்து முடிச்சிட்டு வர லேட் ஆயிடுச்சு சார்.

மனேஜர் : இப்படி சொல்ல உனக்கு கொஞ்சம்கூட வெட்கமா இல்லையா? நான் அதுக்கு மேல... சமைத்த சமான்களை எல்லாம் கழுவி காய வைத்து விட்டு உனக்கு முன்னாடி ஆபிசுக்கு வரல!!!

### சாருஜன்

வெளியில போன மனுசன் கறி, மீனுன்னு வாங்கிட்டு வந்து உசுரு எடுக்காம இருக்கனும்



நேற்றைய குழம்பு வேறு அம்புட்டு இருக்கு

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சோளம் கிடைக்காத காரணத்தால் திரிபோஷாவை தயாரிக்க முடியாத நிலை

(கொழும்பு)

போதுமான அளவில் சோளம் கிடைக்காத காரணத்தினால், ஜா-எலவில் உள்ள திரிபோஷா தொழிற்சாலையில் திரிபோஷாவை தயாரிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை தொடர்பாக அந்த நிறுவனம் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளதுடன் விநியோகஸ்தர்கள் ஊடாக வெளிநாடுகளில் இருந்து சோளத்தை இறக்குமதி செய்ய தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், அமெரிக்கா, பிரேசில், இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் இருந்து ஆயிரத்து 500 மெற்றிக் தொன் சோளம் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சோளத்திற்கு தேவையான இரசாயன பசளை மற்றும் கிருமிநாசினிகள் கிடைக்காத காரணத்தினால், இம்முறை பெரும் போகத்தின் போது சோள அறுவடை பெருமளவில் குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


## ஐயா எப்போதும் எம்மோடு 1 ம் ஆண்டு இறைவன் ஆக

### அமரர்.முருகேசு செல்வமாணிக்கம்



மண்ணில் 08 ❖ 09 ❖ 1931

விண்ணில் 07 ❖ 02 ❖ 2021

அன்பு கொண்டு எமை ஆட்சி செய்து அறம் சொல்ல வளர்த்து விட்டு
பண்பு சொல்ல பாரினிலே உயர்த்தி விட்ட எங்கள் ஐயா ஏணியாய் நீ இருந்தாய்
எம் எண்ணம் எல்லாம் நீ நிறைந்தாய் முத்தான மூத்த மகனாய் பாசமான சகோதரனாய்
நல்லதோர் தந்தையாக பண்பான மாமனாக பெருமை சொல்லும் பேரனாக
குறையில்லா தாத்தாவாக ஊர் போற்றும் உத்தமனாய் காத்தவராயன் தொண்டனாக
கண் போல பார்த்து வந்தாய் எளிமையுடன் வாழ்ந்து இருந்தாய் ஏற்றமுடன் மகிழ்ந்திருந்தாய்
காலம் எல்லாம் அன்பாலே காத்து வந்த எங்கள் ஐயா எம் தந்தை நீ என்று சொல்வதில்
எமக்கு கிடைத்ததே அது வரம் உனைப் போல வாழ்வதற்கே எல்லோரும் தவமிருப்பர்
காத்தவராயன் காலடியில் ஓய்வெடுக்க நீ சென்றாய் உழைத்தது காணும் என்று
ஓய்வெடுக்க சென்று விட்டாய் காலமிது ஓடினாலும் எம் காவல் தெய்வம் நீ தான் ஐயா
உன் ஞாபகங்கள் எம் உயிர் காற்றில் கலந்திருக்கும்
உன் உணர்வாக என்றும் எம்மோடு நிறைந்திருக்கும்

## அம்மா எப்போதும் எம்மோடு 27 ம் ஆண்டு இறைவன் ஆக

### அமரர்.செல்வமாணிக்கம் இராசம்மா



மண்ணில் 10 ❖ 05 ❖ 1938

விண்ணில் 27 ❖ 06 ❖ 1995

அன்பு கொண்டு எமை ஆட்சி செய்து அறம் சொல்ல வளர்த்து விட்டு
வறுமைக் கோட்டிலிருந்து எமை உயர்த்தி விட்டு உன் வயிற்றை
வெறுமை ஆக்கி எம் வயிற்றை நிறைத்து விட்டு சிரித்த முகத்துடனே எமை
சீராட்டி வளர்த்தெடுத்து உனைப் பார்க்க மறந்திருந்தாய் உடல் நலத்தை நீ இழந்து
முடக்கு வாதம் உன்னை மடக்கி போட்டாலும் மூன்றாவது காலுடனே
கோல் ஊன்றி நீ நடந்து எல்லா வேலையையும் எளிமையாய் நீயே செய்து
உனக்கான கடமை என்பாய் உத்தமியே எங்கள் அம்மா 55 வயதினிலே
ஓய்வெடுக்க நீ சென்றாய் எமக்கான கடமையினை நாம் உனக்கோ செய்யவில்லை
காலன் அவன் காலம் எமக்கு தர மறுத்தான். நெஞ்சமிது மறக்காது உன் நினைவுகளை
மீட்டி நிற்கும் எம்மோடு நீ இருப்பாய் எளிமையான எங்கள் அம்மா
காலமிது ஓடினாலும் எம் காவல் தெய்வம் நீ தான் அம்மா
எம்மோடு நீ இருப்பாய் என்றும் எம் உயிர்க்காற்றில் கலந்திருப்பாய்

**இராஜசெல்வம்**
**அல்வாய் வடக்கு, அல்வாய்.**

**குடும்பத்தினர்.** (9849)


# இராசிபலன்

28.01.2022
தை 15, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 8.47 மணிவரை

கேட்டை பின்னிரவு 2.44 மணிவரை
சுபநேரம் - 6.36-8.06 மணிவரை
இராகுகாலம் -11.06-12.36 மணிவரை

சந்திராஷ்டமம்- பரணி
ஏகாதசி விரதம்

**வளவன்**

**மேஷம்**
ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பிரயாண பயமுண்டு.

**கடகம்**
நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் பகை மாறும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**துலாம்**
பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்**
வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், நண்பர்கள் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**ரிஷபம்**
நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்**
பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**
ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், விலைய உயர்ந்த பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும். போசன சுகமுண்டு.

**கும்பம்**
அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும். வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள்.

**மிதுனம்**
அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியமான நாள்.

**கன்னி**
வழிபாடு காரிய வெற்றி தரும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.

**தனுசு**
கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**மீனம்**
தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் நாள், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகி விடும், திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். பயணங்களால் பலனுண்டு.

இதயத்தை நெறிப்படுத்தும் ஆற்றல் மனதிற்கு உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.போதனா மருத்துவமனையில்

# கொரோனா சிகிச்சை விடுதிகளை மீள இயக்குவது தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மீளவும் அதிகரித்துச் செல்லும் நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் இயங்கிவந்த கொரோனா சிகிச்சை விடுதிகளை மீளவும் இயக்குவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கொரோனாத் தொற்று அபாயம் அதிகரிக்கும் நிலையில் எடுக்கப்பட வேண்டிய முன்னாயத்த நிலைமைகள் தொடர்பான உயர்மட்டக் கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது. குறித்த கலந்துரையாடலின் போதே இவ் விடயம் தொடர்பில் ஆராயப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இரண்டு கொரோனாச் சிகிச்சை விடுதிகள் ஏற்கனவே இயங்கி வந்த நிலையில் தொற்றாளர் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்த நிலையில் அவை பயன்பாடற்றுக் காணப்பட்டன.

தற்போது தொற்றாளர் எண்ணிக்கை மீள அதிகரிக்கும் நிலையில் குறித்த விடுதிகளை மீளத் திறப்பது தொடர்பாக ஆராயப்பட்டது. கடந்த நான்கு மாத காலமாக 10 இற்கும் குறைவானோரே யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் அந்த எண்ணிக்கை தற்போது 24 ஆக உயர்ந்துள்ளது.

எனினும், ஒட்சிசன் தேவைப்பாடான நோயாளிகள் இதுவரை அனுமதிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-18-33)



யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலய மாணவர்களுக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை அமரர். க.வைத்திலிங்கத்தின் 29 ஆவது ஆண்டு நினைவாக கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம் : சுபேசன்)



யாழ்.மாவட்ட இலங்கை வங்கி ஓய்வூதியர் சங்கத் தலைவர் இ.பிறேமராஜனால் உடுவில் "ஆர்க்" பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன.

# நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இரு வீதிகளை புனரமைக்க திட்டம்

(குப்பிழான்)

நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரனுக்கும் வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மேற்படி பிரதேச சபையில் இடம் பெற்றது.



இச் சந்திப்பில் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளரின் வேண்டுகோளுக்கு அமைய பிரதேச சபையின் ஆளுகைக் குட்பட்ட இரண்டு வீதிகளைப் புனரமைக்கவும் மற்றும் வீதி அகலிப்பு நடவடிக்கைகளுக்கும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினரால் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அந்த வகையில் கொக்குவில் சந்தியிலிருந்து ஆனைக்கோட்டை செல்லும் ஆடியபாதம் வீதி மற்றும் பொற்பதி வீதி ஆகிய வீதிகளைப் புனரமைப்புச் செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொக்குவில் சந்தி மற்றும் கல்வியங்காட்டுச் சந்தி ஆகிய சந்திகளில் வீதிச் சமிக்ஞைகள் இடும் நோக்குடன் அந்த இடங்களைச் சுற்றியுள்ள பகுதிகளை அகலிப்புச் செய்யவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-5-18)

# முன்களப்பணியாளர்களுக்கு கௌரவிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இலங்கை முழுவதும் கோவிட் பெரும் தொற்றுக்கான தடுப்புமருந்தேற்றல் திட்டத்தின் ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு இக்கொவிட் பெரும் தொற்றுக் கால சவால்களை எதிர்கொள்வதற்கு பெரும் பங்காற்றிய முன்களபணியாளர்களையும், ஒத்துழைப்பு வழங்கிய மக்களையும் கௌரவிக்கும் நிகழ்வானது நாளை 29 ஆம் திகதி காலை 10.06 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இந்நிகழ்வானது "ஐக்கியமாக - ஒரேமனதுடன்-வலுவாக" என்ற தொனிப் பொருளில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மாகாண மற்றும் மாவட்ட சுகாதார திணைக்களங்கள், சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயங்கள், பிரதேச, ஆதார, மாவட்ட பொது மற்றும் போதனா மருத்துவமனைகளில் நடைபெற உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# அரங்க கதையாடல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தினால் மெய்நிகர் இணைய வழியில் நடத்தப்படும் வாராந்த அரங்கக் கதையாடல் 77 ஆவது நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் வேடதாரி அரங்கச் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.ரி.குமரன் "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான் தெருவெளி ஆற்றுகையும் படைப்பாக்கமும்" என்னும் விடயப் பொருளில் கதையாடவுள்ளார்.

இந்நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி 647 3348261 கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ள முடியும். (4-5)



சுவாமி விவேகானந்தர் யாழ்.இந்துக் கல்லூரிக்கு வருகை தந்து 125 ஆவது ஆண்டு நிறைவு விழா நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் கல்லூரியின் இந்து இளைஞர் கழகத்தின் ஏற்பாட்டில் சிறப்பாக இடம் பெற்றது. (படம் : ரவிசாந்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 360 | 500 |
| உருளைக்கிழங்கு | 170 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 500 | 400 |
| தக்காளி | 180 | 180 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 80 | 50 |
| கோவா | 180 | 230 | 250 |
| கரட் | 400 | 460 | 500 |
| பூசணி | 130 | 130 | 160 |
| புடோல் | 200 | 200 | 240 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 300 | 120-250 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 240 |
| பாகற்காய் | 350 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 240 | 180 | 320 |
| கருணைக் கிழங்கு | 90 | 120 | 150 |
| பயற்றங்காய் | 450 | 450 | 400 |
| லீக்ஸ் | 240 | 260 | 300 |
| பீற்றூட் | 300 | 360 | 400 |
| கறிமிளகாய் | 500 | 580 | 500 |
| முருங்கைக்காய் | - | 1000 | - |
| போஞ்சி | 350 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 340 | - | 450 |
| கீரை – 1 பிடி | 70 | 100 | 80 |
| தேசிக்காய் | 150 | 140 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 50-80 | 70-100 |
| இராசவள்ளி | 260 | 180 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 260 | 300 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 60 |
| வல்லாரை | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 120 |

# விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைக்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை வருடந்தோறும் நடத்தும் பண்ணிசை, திருக்குறள் மனனப் போட்டிகள் எதிர்வரும் 13.02.2022 அன்று யாழ்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இதற்கான விண்ணப்பத்தை பாடசாலையூடாக எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் படி அனுப்பி வைக்குமாறு சைவ பரிபாலன சபைச் செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS
# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna , invite sealed bids from eligible and qualified bidders for the construction works in the schedule below.

| | Work / Service Details | Non-refundable Deposit (Rs.) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Renovation of Casualty Operation Theatre | 500.00 | 43,000.00 | 91 | 2.13 | C8 |
| 2. | Aluminium Partition Store Room for JICA OT first floor, Aluminium & Timber Works at Cardiothoracic Ward | 500.00 | 41,000.00 | 91 | 2.03 | C8 |
| 3. | Repair of A & E Building Cylinder Room Wall, Renovation of X- Ray Department Toilets. | 500.00 | 9,000.00 | 91 | 0.45 | C9 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 31.01.2022 up to 15.02.2022 during office hours. The payment shall be made to the Shroff's Office , Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 am on 16.02.2022 , late bids will be rejected. Bids will be open at Director's office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

(c-3650)

**Director (Chairman),**
**Regional Procurement Committee**
**Teaching Hospital, Jaffna.**

28.01.2022


# அழகுக்கலை நிபுணர்களுக்கு லண்டனில் வாய்ப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அழகுக்கலை நிபுணர்கள் 500 பேருக்கு லண்டன் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பாடநெறிகளை தொடர்வதற்கான வாய்ப்பொன்றினை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கல்வி இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.அழகுத்துறையுடன் தொடர்புடைய பிரித்தானிய பிரதிநிதிகள் குழுவுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பின்னரே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுமார் 100 மில்லியனுக்கும் அதிக பெறுமதிகொண்ட சர்வதேச அங்கீகாரம் கொண்ட இப்பாடநெறியினை அழகுத்துறையுடன் தொடர்புடைய 4 பிரிவுகளின் கீழ் தொடரலாமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# பொலிஸ் அதிகாரிகளிடம் லஞ்சம் பெற்ற அமைச்சர்

## அம்பலமான தகவல்

(கொழும்பு)

பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு இடமாற்றத்தை பெற்றுக்கொடுக்க மூன்று முதல் ஆறு இலட்சம் ரூபாய் வரை இலஞ்சமாக பெற்றமை சம்பந்தமாக அமைச்சர் சரத் வீரசேகர மீது பாரிய குற்றச்சாட்டு ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ விடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கொஸ்கமை பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியை அவிசாவளை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக மாற்றியமையை உதாரணமாக காட்டியுள்ளதுடன் இப்படியான பல சம்பவங்கள் நடந்துள்ளதாகவும் கோட்டாபயவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த நிலைமை தொடர்ந்தும் நீடித்தால், தன்னால், பொலிஸ் துறையில் ஒழுக்கத்தை பாதுகாப்பது சிரமம் என பொலிஸ் மா அதிபர் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளார். அமைச்சர் சரத் வீரசேகர தற்போது கொவிட் தொற்று காரணமாக அங்கொடை ஐ.டி.எச் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.அவர் குணமடைந்த பின்னர் உடனடியாக கோட்டாபய இது சம்பந்தமாக முடிவு ஒன்றை எடுப்பார் என பொலிஸ் திணைக்களத்தில் பலர் எதிர்பார்த்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி-5)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 2<br>கி.பா: 37 சூரி 5 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Computer Engineering IT<br>எதிர்பார்ப்பு: பொறியியலாளர்<br>தொ.இ: B/12212 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: சூரி 2 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/8092 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 29 ½ சூரி 10 செவ் 12 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: A/L (கனடா)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு . வெளிநாடு<br>தொ.இ: B/12214 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை.<br>கி.பா: சூரி 6 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:சாதாரண படித்த மணமகன்<br>தொ.இ:G/8124 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 17 சூரி 10 செவ் 7 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc,MSc IT Engineer (கனடா)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/12215 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: சூரி.செவ் 6<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும் (ஜேர்மன், சுவிஸ்)<br>தொ.இ:G/8131 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் 3<br>கி.பா: 29 சூரி 4 செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L (அவுஸ்திரேலியா PR இல்லை)<br>எதிர்பார்ப்பு: உள்நாடு. வெளிநாடு<br>தொ.இ: B/12216 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: சூரி 4 செவ் 6<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்:கணனி பொறியியலாளர்<br>எதிர்பார்ப்பு: அவுஸ்திரேலியா<br>தொ.இ:G/8149 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



சிவமயம்



இணுவில் திருவருள்மிகு

ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய

புனராவர்த்தன அஷ்டபந்தன நிகமோக்த நவகுண்டபக்ஷ மஹாயாக கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

**திருமுழுக்குத் திருமுகம் - 06.02.2022**

**28.01.2022 வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு ஸ்ரீ ஏக தந்த கணபதி ஆராதனை, கிராம சாந்தி, பிரவேசபலி**

எண்ணெய்க்காப்பு | 03.02.2022 வியாழன் பகல் 12.00 மணிமுதல் 04.02.2022 வெள்ளி இரவு 10.00 மணி வரை

06.02.2022 காலை 8 மணிக்கு மேல் 8.45 இற்குள் வரும் கும்பலக்கினத்தில் ஸ்தூபிகள் கும்பாபிஷேகம் தொடர்ந்து பிரதான கும்பங்கள் வீதி பிரதட்சிணம் 8.47 இற்கு மேல் 10.26 மணிக்குள் வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம்

(C-3648)

இங்ஙனம்
விநாயகர் அடியார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோன் வைரஸ்
# தோலில் 21 மணி நேரம் உயிர் வாழும்
## ஆய்வில் தகவல்

(டோக்கியோ)

**கொரோனா வைரஸின் புதிய உருமாற்றமான ஒமிக்ரோன் வைரஸ் தோலில் 21 மணி நேரமும், பிளாஸ்ரிக் பரப்புகளில் 8 நாட்களுக்கும் மேல் உயிர் வாழும் என்று ஆய்வில் தெரிய வந்துள்ளது.**

இது தொடர்பாக ஜப்பானில் உள்ள கியோட்டா மாகாண மருத்துவ பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் இருந்து இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வின்போது, சீனாவின் வுஹானில் உருவான கொரோனா தொடங்கி பல்வேறு மாறுபாடுகள் வரையில், சுற்றுச்சூழல் தன்மையின் வேறுபாடுகளை இவர்கள் ஆராய்ந்து உள்ளனர்.

இதில் ஒமிக்ரோன் வைரஸ் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிருடன் இருக்கும், பிளாஸ்ரிக் பரப்புகளில் 8 நாட்களுக்கு மேல் உயிர் வாழும் என்று தெரிய வந்துள்ளது.

கவலைக்குரிய மாறுபாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ள உருமாறிய கொரோனா வைரஸ்கள், சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை தொடர்பு பரிமாற்றத்தின் அபாயத்தை அதிகரிக்கும் மற்றும் அவற்றின் பரவலுக்கு பங்கு அளிக்கும் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒமிக்ரோன் தோலில் 21 மணி நேரத்துக்கு மேலாக உயிர் வாழ்கிறபோது, அல்பா 19.6, பீட்டா 19.1, காமா 11, டெல்டா 16.8 மணிநேரம் உயிர் வாழும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# பணி ஓய்வு பெற்ற குதிரையை தட்டிக் கொடுத்த பிரதமர்

(டில்லி)

குடியரசுத் தலைவரின் மெய்க்காவலர் பிரிவில் இடம்பெற்றிருந்த 'விராட்' என்ற குதிரை ஓய்வு பெறுவதை அடுத்து, பிரதமர் மோடி 'விராட்'குதிரையை தட்டிக் கொடுத்து அதற்கு விடை கொடுத்தார்.



தலைநகர் டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற குடியரசு தின நிகழ்வில் முப்படைகளின் அணிவகுப்பை குடியரசுத் தலைவர், பிரதமர் மற்றும் மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் பார்வையிட்டனர். அதன் பின்னரே இச் சம்பவம் இடம்பெற்றது.

அருகில் இருந்து குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த், பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங், உள்துறை அமைச்சர் அமித் ஷா உள்ளிட்டோர் அதை ரசித்தனர்.

கடந்த 2003 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் மெய்க்காவலர் பிரிவில் விராட் இணைந்தது. இது வரை 13 முறை குடியரசு தின அணிவகுப்பு 'விராட்' பங்கேற்றுள்ளது. கடந்த ஜனவரி 15 அன்று இராணுவ தினத்தை முன்னிட்டு 'விராட்' குதிரைக்கு இராணுவ தலைமை தளபதியின் சிறப்பு விருது வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பதவி விலக மாட்டேன்
## பிரதமர் போரிஸ்

(லண்டன்)

பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை பிரித்தானிய பிரதமர் போரிஸ் ஜோன்சன் நிராகரித்துள்ளார்.



2020 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் பிறந்தநாள் கொண்டாட்டம் நடந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்ததைத் தொடர்ந்து இத்தகைய விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந் தநிலையிலேயே பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்சன் நிராகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-5)

---

இராணுவ வலிமையை பறைசாற்றிய வடகொரியா

# ஆறாவது தடவையாக மீண்டும் ஏவுகணை சோதனை

(பியாங்யாங்)

வட கொரியா, நேற்று வியாழக்கிழமை கிழக்குக் கடலில் அடையாளம் தெரியாத ஏவுகணையினை சோதனை செய்துள்ளதாக தென்கொரிய இராணுவம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இந்த ஆண்டு வடகொரியா ஆறாவது முறையாக ஏவுகணைச் சோதனையை முன்னெடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு அமெரிக்கா விடுத்த அழைப்பினை புறக்கணித்த வட கொரியா, தொடர்ந்து தனது இராணுவ வலிமையைப் பறைசாற்றி வருகின்றது. (நி-5)

# சுந்தர் பிச்சை மீது வழக்கு பதிவு



(டில்லி)

திரைப்பட காப்புரிமை மீறல் தொடர்பான விவகாரத்தில் கூகுள் சிஇஓ சுந்தர் பிச்சை மீது வழக்கு பதிவு செய்யுமாறு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பிப்பித்துள்ளது.

இதனையடுத்து ஆல்பபெட் நிறுவன தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை மீது மகாராஷ்டிரா பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

பொலிவுட் இயக்குநரான சுனில் தர்ஷன் தயாரித்து இயக்கியுள்ள Ek Haseena Thi Ek Deewana Tha என்ற திரைப்படத்தை உரிமம் இன்றி சட்டவிரோதமாக யூடியூப்பில் வெளியிட அனுமதித்ததாக நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பலமுறை கூகுள் நிறுவனத்திடம் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகவும், இருப்பினும் பதில் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், சுந்தர் பிச்சை மீது வழக்கு பதிவு செய்யுமாறு நீதிமன்றம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கொரோனா கட்டுப்பாடுகளுக்கு டென்மார்க் முற்றுப்புள்ளி

(ஹோபென்ஹாஜென்)

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் முதல் நாடாக கொரோனா கட்டுப்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க டென்மார்க் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முதல் பொது இடங்களில் மக்கள் முகக்கவசம் அணிய வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தடுப்பூசி அட்டை நடைமுறை இனி இல்லை எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

மேலும் பொது முடக்கம், இரவு நேர ஊரடங்கு, பார், கேளிக்கை பூங்கா உள்ளிட்ட அனைத்தும் முன்கூட்டியே மூடுமாறு விதிக்கப்பட்ட உத்தரவு இரத்து செய்யப்பட்டுள்ளது.

தடுப்பூசி மூலம் கொரோனா மற்றும் ஒமிக்ரோன் பரவல் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாக டென்மார்க் பிரதமர் தெரிவித்துள்ளார். (நி-5)

# உக்ரேய்னில் துப்பாக்கிச் சூடு ஐவர் பலி, ஐவர் காயம்

(கீங்)

உக்ரேய்னின் டினிப்ரோ நகரில் தேசிய பொலிஸ் அதிகாரியொருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்ததுடன், மேலும் 5 பேர் காயமடைந்துள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை டினிப்ரோவில் அமைந்துள்ள இராணுவ ஏவுகணைத் தொழிற்சாலையிலேயே இந்த சம்பவம் நடந்துள்ளதாகவும் உள்துறை அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

துப்பாக்கி சூடு முன்னெடுக்கப்பட்டமைக்கான உறுதியான காரணத்தை அதிகாரிகள் இன்னும் தெரிவிக்கவில்லை. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பூஸ்டர் பெற்றுக் கொண்டால் மட்டுமே கொரோனாவிலிருந்து மீள முடியும்

## வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



**(யாழ்ப்பாணம்)**

**யாழ்.மாவட்டத்தில் மூன்றாவது மேலதிக தடுப்பூசியை பெற்றுக்கொள்பவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று அவரால் ஊடகங்களுக்கு அனுப்பப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை யாழ்.மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுக் கொண்டவர்களில் 30.59 வீதமானவர்கள் மட்டுமே தமக்குரிய மூன்றாவது தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ளனர்.


உலக சுகாதார அமைப்பின் அண்மைய ஆய்வின் படி இரண்டாவது கொவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொண்ட தினத்திலிருந்து ஆறு மாதங்களின் பின்னர் தடுப்பூசியின் வினைத்திறனானது குறைவடையும் எனக் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக வயது வந்தவர்களுக்கு ஏனையோரை விட இவ் வினைத்திற னானது சற்று அதிகமாகவே குறைவடையும்.

எனவே தற்போது ஏற்பட்டு வரும் கொவிட்-19 திரிபுகளை எதிர்கொள்ள வேண்டுமாயின் மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்வது அவசியமானதாகும். மக்கள் தொகையில் குறைந்தது 70 வீதமானோர் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டால் மட்டுமே நாட்டில் கொவிட்-19 பெருந்தொற்று ஏற்படாமல் தடுக்க முடியும்.

மூன்றாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்படுவதால் ஏற்படப் போகும் கொவிட் பெருந்தொற்றினால் மிகப்பெரும் எண்ணிக்கையானவர்கள் தொற்றுக்குள்ளாவதுடன் அதிக எண்ணிக்கையான மரணங்களினையும் எதிர்கொள்ள நேரிடும்.

எனவே காலத்துடன் குறைவடைந்து செல்லும் கொவிட்-19 தடுப்பூசியின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு மூன்றாவது தடவையாக கொவிட்-19 தடுப்பூசியினை பெற்றுக் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகின்றது என அவர் தெரிவித்தார். (4-5)

# நீதிமன்ற கட்டட திறப்பு விழா



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நீதிமன்ற கட்டடத்தின் திறப்புவிழா நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் நீதியமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரனி அலிசப்ரி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், வவுனியா உயர் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், அரசியல் பிரமுகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (4-5-316)

# நடமாடும் நீதிச்சேவை முகாமில் உறவுகள் கலந்து கொள்ள வேண்டாம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசால் முன்னெடுக்கப்படும் நடமாடும் நீதிச் சேவை முகாமில், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கலந்து கொள்ள வேண்டாம் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் யாழ்ப்பாண சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு சங்க உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாம் எங்கள் உறவுகளை தொலைத்து 12 வருடங்களுக்கு மேலாக போராடி வருகிறோம். அதற்கான நீதியை பெற்றுத் தருமாறு நாம் சர்வதேசத்திடம் கேட்டுள்ளோம்.

எங்கள் கைப்பட பல ஆவணங்களை அனுப்பியுள்ளோம். ஆகவே இப்போது நீதி அமைச்சால் முன்னெடுக்கப்படும் நடமாடும் சேவை முகாமில், காணாமல் ஆகக்கப்பட்ட உறவுகள் தொடர்பில் எந்த விடயங்களையும் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டாம்.

வேறு ஏதும் விடயங்கள் இருந்தால் அதற்கு மட்டும் அங்கே செல்லுங்கள். கழுத்தை அறுத்து கொலை செய்தவர்களுக்கு எல்லாம் மன்னிப்பு வழங்கியுள்ள அரசு எங்கள் உறவுகளுக்கு என்ன முடிவு?

எமது உறவுகளை இழந்து 13 ஆவது வருடம் ஆகிறது. இன்னமும் நாம் கண்ணீருடன் தான் நாட்களை கழிக்கின்றோம். 3 ஜனாதிபதியை நாம் பார்த்து விட்டோம். கொடுத்த அறிக்கைகள் எங்கே என்று தெரியாது. இந்த அரசிடம் நீதி கிடைக்காது.

ஆகவே சர்வதேசத்தின் அழுத்தத்தின் பிடியில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக இந்த நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளனர். ஆகவே அவர்களின் சேவை முகாமுக்கு போக வேண்டாம். ஒரே நாடு ஒரே சட்டம் என்று சொல்கிறார்கள்.

ஆனால் தெற்கில் ஒரு சட்டம் வடக்கில் ஒரு சட்டம் இது தான் உண்மை என மேலும் தெரிவித்தார். (4-5-33)

# வவுனியாவை வந்தடைந்தது வாகன ஊர்தி பவனி



(குருமன்காடு)

ஒற்றையாட்சிக்கு உட்பட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரிப்போம் என்பதை வெளிப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட ஊர்த்திப் பவனி நேற்று முன்தினம் இரவு வவுனியாவை வந்தடைந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட 6 கட்சிகள் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரி இந்தியாவுக்கு கடிதம் அனுப்பியுள்ள நிலையில், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரித்து சமஷ்டி அடிப்படையிலான தீர்வை வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகளால் யாழ்ப்பாணம் நல்லூரடியில் நாளை மறுதினம் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 இற்கு மாபெரும் பேரணி ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனை வலுச்சேர்க்கும் முகமாக தமிழ் மக்களின் நீண்டகால அபிலாசைகளான சமஷ்டி தீர்வை வலியுறுத்தியும், ஒற்றையாட்சிக்கு உட்பட்ட 13 ஆவது திருத்தச் சட்டத்தை நிராகரிக்க கோரியும் அலங்கரிக்கப்பட்ட ஊர்திப் பவனி ஒன்று நேற்று முன்தினம் மாங்குளம் நகரில் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த பவனி மல்லாவி, விடத்தல்தீவு, மன்னார் ஆகிய பகுதிகளுக்கு சென்று இரவு வவுனியாவை வந்தடைந்தது.

குறித்த பவனி வவுனியா நகரில் இருந்து புறப்பட்டு முல்லைத்தீவு கிளிநொச்சி ஊடாக யாழ்ப்பாணம் வந்தடையும். (4-5-250)

# வவுனியா மாவட்ட செயலக உத்தியோகத்தர் ஒருவருக்கு கொவிட்

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட செயலகத்தில் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான மருத்துவ சான்றிதழ் வழங்கும் பகுதியில் கடமையாற்றும் அரச உத்தியோகத்தர் ஒருவருக்கு உடல் நிலை பாதிப்படைந்த நிலையில் அவருக்கு துரித அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரிசோதனையில் அரச உத்தியோகத்தருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து அவரை சிகிச்சைக்காக தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் சுகாதாரப் பிரிவினர் மேலும் தெரிவித்தனர். (4-5-250)



"நீதிக்கான அணுகல்" எனும் தொனிப்பொருளில் நீதி அமைச்சின் நடமாடும் சேவை நேற்று கிளிநொச்சியில் ஆரம்பமானது. குறித்த நடமாடும் சேவையை நீதி அமைச்சர் அலி சப்ரி இன்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய வளாகத்தில் ஆரம்பித்து வைத்தார்.

(படம்:-சப்தசங்கரி, யதுபாஸ்கரன், தேவானந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையோரின் ஏற்றத்திற்கான எமது முயற்சியைக் கொச்சைப்படுத்தாதீர்கள்

## கம்பவாரிதி இ.ஜெயராஜ்



(நேற்றைய தொடர்ச்சி)

அவற்றை விடுத்து, தேவையற்று எமது நன் முயற்சியை தாழ்த்த நினைப்பது அவரது அறியாமையின் வெளிப்பாடேயாம்.

இத்தருணத்தில், நம் இளையோர்க்கு நாம் எடுக்கத் தொடங்கியிருக்கும் முயற்சி பற்றி விளக்கம் அளிப்பது எமது கடமை என நினைக்கிறோம்.

மூன்று தசாப்தங்களாக போரின் இன்னல்களுக்கு இடையில் வளர்ந்த எமது இளைய தலைமுறை, அதனால் பல பாதிப்புகளுக்கு ஆளாகி இருக்கிறது. அப்பாதிப்புகளில் முக்கியமானதாய் நாம் கருதுவது 'ஆளுமை' இழப்பினையேயாம். இத்தனை பெரிய இன்னல் பாதையைக் கடந்து வந்த பின்னும்கூட நம் இளையோர், தம் அறிவாற்றலில் யாருக்கும் 'சோடை' போகவில்லை. ஆனால், நிகழ்ந்த ஆளுமை இழப்பு என்பது அவர்கள் அடைந்திருக்க வேண்டிய உயர் நிலைகளை அடைய முடியாமல் ஆக்கியிருக்கிறது.

இதுபற்றி நானும் எனது கழக நண்பர்களும் பல காலமாக சிந்தித்து வருகிறோம். அதிகூடிய பரீட்சை சித்தி பெற்ற மாணவனும் கூட, நம் மண்ணைத்தாண்டி தெற்கிற்குள் நுழைந்தால், அங்குள்ள மாணவர்களின் ஆளுமைக்கும், நிமிர்விற்கும் முன்னால் நின்று பிடிக்க முடியாமல் தளர்ந்து போகிறான். அதனால் அவன் கஷ்டப்பட்டு தேடிய தகுதிகளெல்லாம் 'விழலுக்கிறைத்த நீராய்' ஆகிவிடுகின்றன.

நாம் கூடி ஆராய்ந்தபோது இதற்கான இரண்டு காரணங்களை இனங்கண்டோம். முதலாவது, இந்நாட்டில் பயிலப்படும் மொழிகளில், தமிழ் மொழி தவிர்ந்த மற்றைய மொழிகளில் நம் இளையோர்க்கு ஏற்பட்டிருக்கும் பயிற்சியின்மை. இரண்டாவது, உயர் ஆளுமையாளர்களை சந்திக்கக் கிடைக்காத வாய்ப்பிழப்பு.

நம் மண்ணில் ஆளுமையாளர்கள் இல்லையா? என உடன் கேட்பீர்கள். முற்றாய் இல்லை என நான் சொல்ல மாட்டேன். ஆனால் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்த உயர் கல்வியாளர்கள், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் என்பவர்களின் ஆளுமைத்திறனோடு ஒப்பிடும்போது இன்றைய நம் சமூகத்தின் ஆளுமைத்திறன், பூச்சியத்தை அண்மித்ததாகவே இருக்கிறது. அதனால், இன்று நம் இளையோர் பதவிகளையும் பட்டங்களையும் மட்டுமே ஆளுமையாய் நினைந்து, ஏமாந்து, உயர் ஆளுமைத் தரிசனம் இன்றிக் கிடக்கின்றார்கள்.

தெற்கில் வாழ்ந்த இளையோரோ, போர்க்காலத்திலும் தனிமைப்படாது உலகத் தொடர்பைப் பேணி வந்தார்கள். அதனால் அவர்களது மொழித்திறனும் ஆளுமைத்திறனும் மிகவும் விருத்தியாகி இருக்கிறது. அவர்கள் ஆளுமைத் திறனில் முப்பதாண்டு முன்னால் பயணிக்க, நம் பிள்ளைகள் பின்னால் பயணித்தார்கள். காலம் செய்த கொடுமை இது! இதனால் அவர்களுக்கும் நம் பிள்ளைகளுக்கும் இடையிலான ஆளுமை வேறுபாடு ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது.

இந்த இடைவெளியை நிரப்பி நம்மவர்களின் ஆளுமையை வளர்ச்சியுறச் செய்து, பழையபடி மற்றவர்கள் நம் பிள்ளைகளின் நிமிர்வு கண்டு, வியக்கும் நிலைக்கு நம் சமூகத்தையும் நிமிரச் செய்ய வேண்டும் என்பதற்காகவே எமது இந்தப் புதிய முயற்சியை நாம் தொடங்கியிருக்கிறோம்.

இன்று இத்தகைய ஆளுமைப் பயிற்சிக் களங்கள் பலராலும் பரவலாக நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் அவற்றிலெல்லாம் வெறும் வகுப்பு எடுக்கும் முயற்சியே செய்யப்படுகிறது. அதனால் பெரும்பயன் கிடைக்காது என்பது எம் கருத்து. அதனாற்றான், மொழிப்பயிற்சியையும் ஆளுமைத் திறனையும் செயல்முறையூடாக நம் இளைஞர்கள் பெற வேண்டும் என நாம் நினைந்தோம்.

அதற்காக, இலங்கையின் பிற பகுதிகளிலும் வெளிநாடுகளிலும் வாழும் ஆற்றல்மிக்க மொழியியல் அறிஞர்கள், ஆளுமையாளர்கள் ஆகியோருடன் நம் இளையோர்க்கான சங்கமத்தை உண்டாக்க வேண்டும் என முடிவு செய்தோம். அச்சங்கமத்தால், இலங்கையளவில் தேவைப்படும் சிங்கள மொழிப் பயிற்சியையும், உலக அளவில் தேவைப்படும் ஆங்கில மொழிப் பயிற்சியையும் இயல்பாக உருவாக்கலாம் என்றும் உயர் ஆளுமையாளர்களின் சங்கமத்தால் நம் பிள்ளைகளின் ஆளுமையை வளர்ச்சியுறச் செய்யலாம் என்றும் நாம் கருதினோம்.

அதனால், இயல்பாகவே ஆளுமைத்திறன் கொண்ட இளையோர் சிலரை இனம் கண்டு, அவர்களை வேற்று மொழியாளர்களுடனும், ஆளுமையாளர்களுடனும் ஒன்றாகத் தங்க வைத்து, மொழித்திறன், ஆளுமைத்திறன் ஆகியவற்றை பயிலச் செய்ய வேண்டும் என்பது எங்களது முதற் திட்டமாய் இருக்கிறது. ஆங்கிலத்தை ஆங்கிலேய ஆசிரியர்களுடனும், சிங்களத்தை அம்மொழி சார்ந்த ஆசிரியர்களுடனும் நாள் முழுதும் உடன் இருந்து செயல்முறையால் அவர்களைப் பயிலச் செய்ய வேண்டும் என நினைத்திருக்கிறோம்.

மொழிப்பயிற்சியை ஏற்படுத்திய பின்பு, ஆளுமைமிக்கவர்களை சந்திக்கவும், அவர்களோடு உடன் இருக்கவும் செய்து, அவர்களின் ஆளுமைத் திறனை நம் இளையோர் உள்வாங்கும் படியாகச் செய்ய வேண்டும் என்பது எமது அடுத்த திட்டமாய் இருக்கிறது. அதற்காக ஆளுமைமிக்க அரசியல் தலைவர்கள், நிறுவனத்தலைவர்கள், தொழிலதிபர்கள், வெளிநாட்டுத் தலைவர்கள் ஆகியோரைச் சந்திக்கச் செய்து, அவர்களோடு ஓரிரு தினங்கள் இவர்களைத் தங்க வைத்து, அதன் மூலம் நம் இளையோரின் ஆளுமைத்திறனை வளர்த்தெடுக்க வேண்டும் என தீர்மானித்திருக்கிறோம்.

இங்குதான், அந்நண்பர் எழுப்பிய பிரச்சினை வருகிறது. நம் இளையோர்கள் ஆளுமைமிக்க இராணுவ உயரதிகாரிகளைச் சந்தித்து, அவர்களோடு நம் பிரச்சினைகளைப் பற்றி சமநிலையில் நின்றுபேசி, தீர்வு காணும் துணிவைப் பெறுவதற்காகவும் இராணுவத்தின் இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தெரிந்து கொள்வதற்காகவும் அவர்களை இராணுவ முகாம்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறோம். யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற ஹாட்லி, சென்.ஜோன்ஸ் கல்லூரிகளில் அதிபராய் இருந்த பூரணம்பிள்ளையே, இம்முறையை எமக்கு முன்பு ஒருதரம் சொல்லியிருந்தார்.

அதுமட்டுமன்றி, நம் இளையோர்க்கு இத்தேசத்தில் வாழும் பிற மொழிச் சமூகங்கள், பிற மதங்கள் என்பவற்றைப் பற்றியும் ஆழ்ந்த புரிந்துணர்வை உண்டாக வேண்டும் என்பதற்காக, அத்தகைய இடங்களில் நம் இளையோரை நேரடியாகத் தொடர்புபடுத்தி அனுபவம் பெறச் செய்ய வேண்டும் என்பதும் எம் எண்ணமாய் இருக்கிறது.

ஒரு சிறு தேசத்திற்குள் வாழ்ந்தாலும், நம்மவர்க்கு அருகில் இருக்கும் மதங்கள் பற்றியோ, அம் மதத்தாரின் வழிபாட்டு முறைகள் பற்றியோ பெரும்பாலும் தெரிவதில்லை. அதுபோலவே அருகிருக்கும் வேற்று இன மக்களின் வாழ்க்கை முறை, உணவுமுறை, கலாசாரம், பண்பாடு என்பவை பற்றியும் நம்மவர்கள் தெரிந்திருப்பதில்லை. இவற்றையெல்லாம் தெரிந்து கொண்டால் நம் இளையோரிடம் பரந்த சிந்தனையும் மற்றைய சமூகங்களுடன் சமப்பட்டு இணைந்து வாழும் திறனும் தாமாக உண்டாகும். அதனால் நம் இளையோரின் ஆளுமை மிக வேகமாக வளரும். அது மட்டுமல்லாமல் நம் இனத்தினதும், மொழியினதும், மதத்தினதும் பெருமைகளையும் மற்றவர்க்கு உணர்த்துகிற வாய்ப்பும் அவர்களுக்குக் கிட்டும். அதனால்தான் இப்பயிற்சியில் ஈடுபடப்போகும் இளையோரை மற்றைய இன, மத, மொழி மாணவர்களுடன் கலாசாரப் பரிவர்த்தனம் செய்யவேண்டும் எனவும் திட்ட மிட்டுள்ளோம்.

இவையெல்லாம் எமது கனவுகள்! ஒரு காலத்தில் இலங்கை முழுவதிலுமாக தமிழினத்தார் கொண்டிருந்த ஆளுமைமிக்கத் தலைமைத் தன்மையை மீட்டெடுக்கும் முயற்சியாகவே இத்திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம். நடந்து முடிந்த போரையும் அதன் பாதிப்புக்களையும் சொல்லிச் சொல்லி, எவ்வளவு காலத்திற்குத்தான் எம் வாழ்க்கையை நாம் ஓட்டுவது? நிகழ்கால முயற்சியால், இறந்தகாலப் பாதிப்புக்களை நீக்கி வருங்காலத்திலேனும், நம் கைவிட்டு நழுவிப்போன வீரியத்தை நாம் மீட்டெடுக்க வேண்டாமா? அதற்காகவே இலக்கிய முயற்சி எனும் எம் எல்லையைக் கடந்து இத்தகைய ஒரு பாரிய சமூகப்பணியை முன்னெடுக்கத் தொடங்கியிருக்கிறோம்.

எங்களின் இம்முயற்சிக்கு கைகொடுக்க முன்வராவிட்டாலும், அதனைக் கொச்சைப்படுத்த முனையாமலேனும் இருக்க வேண்டும் என அனைவரையும் வேண்டி நிற்கின்றோம். இப்போது நாம் தொடங்கியிருப்பது மேற்சொன்ன திட்டங்களுக்கான 'பிள்ளையார் சுழி' மட்டும் தான்.

அந்நன் முயற்சியை முளையிலேயே கருகச் செய்ய நினைக்கும் சில சுயநலவாதிகளின் கருத்துகளுக்கு ஆட்படாமல், நமது இளைய தலைமுறை எம்முடன் தோளோடு தோள் நின்று பாடுபட முன்வர வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறோம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைக்கிள்களில் பயணிக்கும் அரச ஊழியர்களுக்கு சலுகைகள்



(கொழும்பு)

துவிச்சக்கர வண்டி பாவனையை ஊக்குவிக்கும் வகையில் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

சைக்கிளில் பயணிக்கும் அரச ஊழியர்களுக்கு பதவி உயர்வு சலுகைகளை வழங்குவதற்கான ஒழுங்குமுறை வேலைத்திட்டம் ஒன்றையும் அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

காற்று மாசைக் குறைக்கவும் நேர விரயத்தைத் தடுக்கவும் தொற்று அல்லாத நோய்களைக் கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக சைக்கிள்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (நி-5)

# தேவையற்ற அபிவிருத்திகளை விடுத்து மக்களுக்கு நிவாரணம் வழங்குங்கள்

## பேராசிரியர் திஸ்ஸ விதாரண கோரிக்கை

(கொழும்பு)

நாட்டில் சுமார் 60 வீதமான குடும்பங்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர் என ஸ்ரீலங்கா சமசமாஜ கட்சியின் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளமையும் இதற்கான முக்கிய காரணமெனவும் அவர் குறிப்பிட்டார்.

ஆண்டுக்கு ஆண்டு சராசரியாக 5வீதம் முதல் 6 வீதம் வரை மட்டுமே உயரும் பொருட்களின் விலைகள், கடந்த மாதத்திற்குள் குறைந்தபட்சம் 14 வீதம் வரை அதிகரித்துள்ளது.

உணவுகூட வாங்க முடியாத நிலையேற்பட்டுள்ளதுடன், இன்று மக்கள் எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சினை பசி.

இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிய அவர், சில குடும்பங்கள் சிரமத்துடன் ஒரு நாளைக்கு ஒரு வேளை மட்டுமே உண்ண முடிவதாகக் குறிப்பிட்டார்.



தேவையற்ற அபிவிருத்திகளை ஒத்திவைத்து பொது மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு அரசாங்கத்திற்கு அவர் அழைப்பு விடுத்தார். (நி-5)

# எரிவாயு தொடர்பில் முறையிட 1977 ஐ அழைக்கவும்

## நுகர்வோர் அதிகாரசபை

(கொழும்பு)

குறைபாடுகள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் பயன்படுத்தப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை மீள ஒப்படைக்க விரும்பும் நுகர்வோரை அனுமதிக்குமாறு நுகர்வோர் விவகார ஆணையம் எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளது.

மேலும் இவ்வாறான எரிவாயு சிலிண்டர்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் விநியோகஸ்தர்கள் தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடுகளை சமர்ப்பிக்க முடியும் என நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் சாந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

1977 என்ற இலக்கத்தின் ஊடாக நுகர்வோர் விவகார அதிகாரசபையின் அவசர தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் ஊடாக முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# எதிர்வரும் வாரங்களில் மின்வெட்டு ஏற்படாது

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

(கொழும்பு)

மின்சார சபைக்கு எதிர்வரும் 10 நாட்களுக்கு தேவையான எரிபொருளை வழங்கவுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

அத்தோடு, சபுகஸ்கந்த மின் உற்பத்தி நிலையத்திற்கும் எரிபொருளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அதன் தலைவர் சுமித் விஜேசிங்க தெரிவித்தார்.

எனவே எதிர்வரும் வாரங்களில் மின்வெட்டு ஏற்படாது எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## மாற வேண்டிய மனப்போக்கு

ஒரு பொருளைப் பேரம் பேசி வாங்க எண்ணுபவன் முதலில் குறைந்த விலைக்குக் கேட்ட பின்னரே அதைப் படிப்படியாக உயர்த்துகிறான்.

புராண நாயகன் முதலில் சாதாரணப் பாணாத்தையும் அதற்கு எதிரி மடியாவிட்டால் மட்டுமே வலிமை மிகுந்த பாணத்தையும் எய்ததாகப் படித்திருக்கிறோம்.

ஒரு மருத்துவர் எடுத்த எடுப்பிலேயே சக்தி வாய்ந்த மருந்துகளைக் கொடுத்து காய்ச்சலைக் குறைக்க எண்ணுவதில்லை. முதல் மருந்திற்குக் காய்ச்சல் நிற்கவில்லை என்றால்தான் அதற்கு அடுத்த வீரியம் மிகுந்த மருந்தைக் கொடுக்கிறார்.

காரணம் எடுத்த எடுப்பிலேயே சக்தி வாய்ந்த மருந்துகள் அழிக்கப்பட்டால் நோயாளிக்கு அதைத் தாங்கிக் கொள்ளும் வலிமை இல்லாது போய் விடலாம். அல்லது ஒவ்வொரு முறையும் மிகச் சக்தி வாய்ந்த மருந்து அழிக்கப்பட்டால்தான் நோய் குணமாகும் என்ற சூழ்நிலை உருவாகிவிடலாம். இதைக்காட்டிலும் ஆபத்தானது வேறு ஒன்றுமில்லை.

மேற்கூறிய மூன்று உதாரணங்களுமே எதிலும் படிப்படியான வழிகளைத்தான் கையாள வேண்டும் என்பதைச் சற்றும் குறைவறச் சொல்லுகின்றன அல்லவா?

இத்தகைய உதாரணங்களை நாம் மே லோட்டமாகக் காணாமல் அவற்றின் உட்பொருளை உணர்ந்து அதை நடைமுறை வாழ்வில் பின்பற்றக் கூடாது?

அதாவது ஒருவரைக் கண்டிக்கும் பொழுது; மற்றவருடன் வாதிடும் பொழுது;அவருக்கு வாக்குறுதி அழிக்கும் பொழுது; எதிரியை வெல்ல எண்ணும் பொழுது ; நமக்கெதிரான போட்டிகளைச் சமாளிக்கும் பொழுது; இப்படி ஒவ்வொரு செயலிலும் ஒவ்வொரு படியாக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர குரங்குத் தாவலாய் ஒன்பதாம் படிக்குத் தாவ எண்ணக்கூடாது.

குறைந்த பட்ச ஆயுதத்தாலேயே நமக்குப் பலன் கிடைத்துவிடுமா என்று பார்க்க வேண்டும். அதுதான் நமக்கு பாதுகாப்பு.

தனக்குக் கீழ் பணிபுரிவர்களையோ, தன் மனைவி மக்களையோ ஒருவர் தேவையில்லாமல் கடுமையாகக் கண்டிக்கிறார் என வைத்துக் கொள்வோம். இந்நிலையில் அவர்களது மனம் படாத பாடு படலாம்.

அது வெறுப்பாக மாறலாம். அதுவே அவர்களுக்கு வாடிக்கையான ஒரு விடயமாகி "ஆமாம் ,சும்மா இவருக்கு இதேவேலை?" என்ற சலிப்பு மனப்பான்மையைத் தோற்று வித்து விடலாம். அப்புறம் இவர்களிடம் எத்தகைய அணுகுமுறையும் செல்லாமல் போய்விடும்.

நமக்குக் காரியமும் ஆக வேண்டும். அவர்களைப் பகைத்துக் கொள்ளவும் கூடாது ; வெறுப்புறச் செய்தலும் கூடாது என்றால் ,கடுமையான வழி அவசியம் தானா என்று ஒரு முறையேனும் சிந்திக்க வேண்டும்.

கண்ணுக்குப் புலப்படுவதற்கே அரிதாயுள்ள பூச்சியை அடிக்க கடப்பாரை தேவைதானா?

வெற்றிக்கனி எளிதாகக் கிட்ட இருக்கும்போது வேதனை மிக்க வழிகளைப் பின்பற்றுவானேன்?

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அறிவாளி

ஆனால், உங்களுக்கென்று ஒரு சலுகை தரப்பட்டுள்ளது.

உண்மையை நீங்கள் உணர்ந்து கொள்வதன் பொருட்டு வீரர்களைத் தொடாமல் ஏதாவது ஒரு பொருளைக் கொண்டு அறிய முயற்சிக்கலாம். அவ்வளவுதான் நிபந்தனைகள்!" என்றார்.

“இளைஞர்களே இப்போது வீரர்களுக்கு ஓரடி இடைவெளியில் ஒவ்வொருவரும் வந்து முயற்சி செய்யலாம்!”

இளைஞர்கள் அந்த இரண்டு வீரர்களையும் தங்கள் கண்களாலேயே அளவெடுத்தனர்.

இருவரும் ஒரே நிறத்தில், உடைகள் அணிந்திருந்தனர். ஒரே மாதிரி ஆயுதங்களை ஏந்தி இருந்தனர். அவர்களின் மெல்லிய புன்முறுவல், கண்கள் எல்லாமே ஒன்றாகவே இருந்தன.

முதலாவது இளைஞன் முன்சென்று நின்றான். வீரர்களை உற்று நோக்கினான்.

அவனுக்கு யார் உண்மை, யார் போலி என்று தெரியவே இல்லை. தொங்கிய முகத்துடன் திரும்பினான்.

சிலர் கை தட்டி ஓசை எழுப்பிப் பார்த்தனர். சிலர் வீரன் முன்னால் வந்து நின்று அவனை மிரட்டும் தொனியில் குரல் எழுப்பினர்.

சிலர் நகைச்சுவையான விடயங்களைக் கூறிச் சிரிக்க வைக்க முயன்றனர்.

வேறு சிலர் ஒரு வீரனின் கண்களைக் குறி வைத்து அவை அசைகின்றனவா? இல்லையா? என்று நோட்டமிட்டனர்.



ஆனால், இருவருமே நிலை குத்திய பார்வையுடன் காணப்பட்டனர். ஒருவனுக்கும் உண்மையைக் கண்டறியும் சக்தி இல்லை.

கடைசியாகப் பதினைந்தாவது இளைஞன் முன் வந்தான். அவன் நீண்ட நேரம் வீரர்கள் இருவரையும் தூரத்திலிருந்தே பார்த்துக் கொண்டிருப்பதால், தனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தவுடன் சிறிது நேரம்கூட வீணாக்காமல் அருகில் நின்றிருந்த அமைச்சர் ஒருவரிடம் கேட்டான்.

“மந்திரி அவர்களே, எனக்கு ஒரு தீப்பந்தம் தந்து உதவ வேண்டும்!” என்றான்.


மந்திரி, மன்னனைப் பார்க்க, மன்னன் தலையசைத்தான். சிறிது நேரத்தில், அவனுக்கு ஒரு தீப்பந்தம் தரப்பட்டது.

அவன் அந்தத் தீப்பந்தத்தைப் பெற்றுக் கொண்டவனாய், அந்த வீரர்களின் வலது பக்கத்துக்குச் சென்றான்.

வீரர்களுக்கு ஓரடி இடைவெளியில் நின்று கொண்டான். பின் தனக்கு வலது பக்கம் உள்ள வீரனின் முன் அந்தத் தீப்பந்தத்தை நீட்டிப் பிடித்தான்.

அரண்மனை எங்கும் நிசப்தம் சூழ்ந்தது. சிறிது நேரத்தில் அவன் நீட்டிய பக்கத்திலிருந்த வீரன் மெல்ல மெல்லக் கரைந்து உருக ஆரம்பித்தான். (தொடரும்)

# மகாபாரதம்




அப்போது அவரை சுவர்க்கத்திற்கு அழைத்துச் செல்லத் தேவேந்திரனே விமானத்துடன் வந்து அழைத்தான்.

“என்சகோதரர்களும், திரௌபதியும் இல்லாமல் நான் மட்டும் வர மாட்டேன்” என தருமர் பதில்உரைத்தபோது நாய் விமானத்தில் ஏற முற்பட்டது.

அப்போது இந்த நாய்க்குச் சுவர்க்கத்தில் இடமில்லை" என்று கூறித் தடுத்தான் இந்திரன். தருமர், “என்னிடம் அடைக்கலம் அடைந்த நாயை விட்டு நான் ஒரு போதும் வர மாட்டேன். இது நான் மேற்கொண்ட விரதம்” என்றார்.

அப்போது நாய் தன் வடிவத்தை மாற்றிக் கொண்டு தர்ம தேவதையாகக் காட்சியளித்தது. “தரும நெறியிலிருந்து பிறழாத உன்னை நான் பாராட்டுகிறேன். தருமத்தை நீ எந்த அளவு காக்கிறாய் என்பதைக் கண்டறிய முன்பும் நான் நச்சுப் பொய்கையில் சோதித்தேன்.

உடன் பிறப்புகளுக்கும், மாற்றாந்தாய் மக்களுக்கும் இடையே வேறுபாடு ஏதும் கருதாத உனது தரும வேட்கையை அன்றும் அறிந்தேன். இப்பொழுது நாயின் மீது கொண்ட கருணையுள்ளத்தால் இந்திரன் தேரில் ஏற மறுத்தது கண்டு பாராட்டுகிறேன்”என்று கூறி நாயாக வந்த தரும தேவதை மறைந்தது.

இந்த அற்புதத்தைக் கண்ட தேவர்கள் வியப்படைந்தனர். தருமர் ரதத்தில் ஏறிச் சுவர்க்க லோகம் சென்றார். அங்கு நாரதர் அவரை வரவேற்றுப் பாராட்டினார்.

“நல்லொழுக்கத்தை விரதமாகக் கொண்டு வாழ்ந்த புண்ணிய பலத்தினால் நீ உடலோடு இந்த சுவர்க்கத்திற்கு வந்துள்ளாய். உன்னைத் தவிர இத்தகைய நற்பேறு பெற்றவன் உலகில் வேறு யாருமில்லை” என்று மேலும் புகழ்ந்தார் நாரதர்.

நாரதரின் இப்பாராட்டு தருமர் காதுகளில் விழவில்லை. அவரது கண்கள் அவரது சகோதரர்களையும், திரௌபதியையும் தேடியது. ஆனால் அவர்களைக் காண இயலவில்லை.

**ஆரோஹன பருவம்**
**(சுவர்க்கத்தில் ஏற்றம் பெறுவது)**

சுவர்க்கத்திற்குச் சென்ற தருமர் கோலாகலமாய் இருந்த ஓர் இடத்தை அடைந்தார். அங்கு துரியோதனன் ஒரு இருக்கையில் அமர்ந்திருந்ததைக் கண்டார். பேராசைக்காரன் இருக்கும் இடத்திற்கா வந்து விட்டேன். எனத்தன் தலைவிதியை நொந்து கொண்டார்.

“திரௌபதியை அவைக்கு இழுத்து வரச் செய்து அவமானப்படுத்தியவன் அல்லவா? இவன்.இவனை நான் காண விரும்பவில்லை.

என் சகோதரர்கள் இருக்கும் இடத்திற்கே செல்ல விரும்புகிறேன்” என்றார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் சக்தி கணக்கில் வரும் பூஜ்யத்தைப் போன்றது. மக்களின் சக்தி 'ஒன்று' என்ற எண்ணைப் போன்றது.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விவசாயிகளின் திண்டாட்டத்தை புரிந்துகொள்ளாத வடக்கு நிர்வாகம்

வடக்கு மாகாணத்தின் நிர்வாகம் என்பது இப்போது முற்றுமுழுதாக வடக்கு மாகாண ஆளுநரின் கைகளிலேயே தங்கியுள்ளது.

மாகாண அரசு இல்லாத நிலையில், வடக்கு மாகாணத்தின் நிர்வாகத்துக்கு ஆளுநர் தலைமையிலான நிர்வாகமே பொறுப்பு என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இதை நாம் கூறுவது, மாகாண அரசின் கடமைகளையும் உள்ளடக்கியதாக ஆளுநரின் நிர்வாகப் பணி அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்கானதாகும்.

அதாவது மாகாண அரசு இயங்கும்போது முதலமைச்சர், அமைச்சர்கள், சபை உறுப்பினர்கள் என்ற பெரியதொரு அணி வடக்கு மாகாணத்தின் நிர்வாகக் கட்டமைப்பைக் கவனித்துக் கொண்டது.

இதற்கு மேலாக, மக்களின் பிரச்சினைகளை மாகாண சபை அமர்வுகளில் முன்வைத்து இதற்கு என்ன தீர்வு? என்று கேள்வி எழுப்புகின்ற கடமையை எதிர்க்கட்சிகள் செய்து வந்தன.

இதனால் வடக்கு மாகாணத்தில் பொதுமக்கள் எதிர்கொள்கின்ற அடிப்படைப் பிரச்சினைகள் ஏதோவொரு வகையில் சபை யேறக் கூடியதாக இருந்தது.

ஆனால் மாகாண அரசு முடிவுக்கு வந்த பின்னர் ஆளுநரின் பொறுப்பிலேயே வடக்கு மாகாண நிர்வாகம் தங்கியுள்ளது.

அவ்வாறாயின் வடபகுதியில் உள்ள மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணுகின்ற தார்மீகப் பொறுப்பு வடக்கு மாகாண ஆளுநரின் தலையாய கடமையாகிறது.

எனினும் வடபகுதி மக்களின் ஒட்டுமொத்தப் பிரச்சினைகளையும் தனி மனிதனாக நின்று கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காண்பதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது.

இங்குதான் சம்பந்தப்பட்ட அமைச்சுகள், திணைக்களங்கள், சேவை வழங்கும் நிலையங்கள் மூலமாக மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து அவற்றுக்குத் தீர்வு காணப்பட வேண்டும்.

அவ்வாறு தீர்வு காணப்படாதவிடத்து அது பற்றிய விளக்கத்தை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

தவிர, பொதுமக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பில் ஊடகங்களில் வெளிவருகின்ற தகவல்களை மையப்படுத்தியும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுகின்ற ஏற்பாடுகள் இருக்கும்போதுதான் ஆளுநர் தலைமையிலான நிர்வாகம் வினைத்திறனுடன் செயலாற்ற முடியும்.

ஆனால், ஊடகங்களில் வெளிவருகின்ற செய்திகள் தொடர்பில் வடக்கு ஆளுநர் அலுவலகம் கவனம் செலுத்துவதுபோல தெரியவில்லை.

உதாரணமாக வடபகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டு வெள்ளம் காரணமாக பயிரழிவை எதிர்கொண்ட வடபகுதி விவசாயிகள் தமக்கு ஏற்பட்ட நட்டஈட்டை பெறுவதற்குரிய காப்புறுதி விண்ணப்பத்தைக்கூடப் பெறமுடியாமல் உள்ளனர்.

இதுபற்றி ஊடகங்களில் செய்திகள் வெளிவந்தபோதும் ஆளுநர் தரப்பு அமைதியாக இருக்கிறதெனும்போது, விவசாய காப்புறுதி சபையும் ஆளுநர் அலுவலகமும் சேர்ந்து வடபகுதி விவசாயிகளுக்கு நட்டஈடு கிடைப்பதை மறைமுகமாகத் தடுக்கின்றனவோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

## கொரோனா பரவலை கட்டுப்படுத்தாவிட்டால் கடுமையான நிலைக்கு முகம் கொடுக்க நேரிடும்

### விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம

(கொழும்பு)

நாட்டில் கோவிட் தொற்று தீவிரமாக பரவி வருகின்றது. இந் நிலை தொடருமானால் நீண்ட காலம் செல்வதற்கு முன்னர் சமூகத்தில் பயங்கரமானதொரு நிலை ஏற்படும் என அங்கொடை தொற்று நோய் நிறுவனத்தின் விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

தற்போது அதிகமானவர்கள் சுகாதார பாதுகாப்பு வழிமுறைகளை மறந்து செயற்படுகின்றனர். விசேடமாக திருமண நிகழ்வுகள் உட்பட அதிகமான வைபவங்களுக்கு சுகாதார பிரிவினரால் வழங்கப்பட்டிருக்கும் பரிந்துரைகள் முறையாக பின்பற்றப்படுவதை காணக்கூடியதாக இல்லை.

திருமண நிகழ்வு உட்பட பல்வேறு வைபவங்களுக்கு அதிகமான மக்கள் கலந்துகொள்வது பிரச்சினைக்குரிய விடயமாகும்.

அத்துடன் இவ்வாறு வைபவ நிகழ்வுகளுக்கு அதிகமான எண்ணிக்கையிலானவர்கள் கலந்துகொள்வது, ஒமிக்ரோன் வகை வைரஸ் பரவி தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க காரணமாக இருக்கலாம்.

அதனால் மக்கள் நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்திற்கொண்டு செயற்படவேண்டும் என்பதுடன் வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்த கோவிட் தடுப்பூசியின் 3 ஆவது டோஸையும் விரைவாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ம)

## மிருசுவிலில் நண்பர்களுடன் தேநீர் அருந்தியவர் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் உசன் பகுதியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்திக் கொண்டிருந்த ஓய்வுநிலைப் படை அதிகாரி ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. மாத்தளையைச் சேர்ந்த 51 வயதான ஓய்வுநிலைப் படை அதிகாரியான ஜெயசிங்க தனது நண்பர்களுடன் இணைந்து தேநீர் அருந்திக் கொண்டிருந்தார்.

இதன்போது அவருக்குத் திடீர் நெஞ்சுவலி ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் அறிக்கையிட்டனர். (ம-18)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் இந்துக்கல்லூரி பழைய மணாவர் சங்க நிர்வாகத் தெரிவும் பொதுக்கூட்டமும் நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி அதிபர் ச.பரமேஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

எனவே பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (4-5)

## கோவிட் நிலைமை காரணமாக வவுனியா குடிவரவு, குடியகல்வு காரியாலயம் மூடப்பட்டது

கோவிட் தொற்று காரணமாக குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டது.

குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் வவுனியா பிராந்திய காரியாலயத்தில் கடமையாற்றும் இரு உத்தியோகத்தர்களுக்கு நேற்று கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கடவுச்சீட்டு விநியோகம், கடவுச்சீட்டு விண்ணப்பம் பெறுதல் என அனைத்து செயற்பாடுகளும் மறு அறிவித்தல் வரை நிறுத்தப்பட்டு பிராந்திய காரியாலயம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானர்கள் சிகிச்சைக்காக தனிமைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்பில் இருந்த உத்தியோகத்தர்களுக்கும் கோவிட் பரிசோதனை மேற்கொள்ள சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)

## சாதனையாளர் கௌரவிப்பு

அலியான்ஸ் ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சாதனையாளர் கௌரவிப்பு நிகழ்வும் புதிய வியாபாரங்களை கையளித்தல் நிகழ்வும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். நகரிலுள்ள வலம்புரி விருந்தினர் விடுதியில் இடம்பெறவுள்ளது.

அலியான்ஸ் ஆயுட் காப்புறுதி நிறுவனத்தின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தின் உதவிப் பொது முகாமையாளர் கோ. ஸ்ரீவரதன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்விற்கு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜெயலால் ஹேவவாசம் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 29 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** கல்வயல், மானாவளை, சந்திரபுரம், கெருடாவில், மட்டுவில், புத்தூர் வீதி மட்டுவில், இராணுவ முகாம், கெருடாவில், மயிலியதனை, பொக்கணை, சிதம்பராக் கல்லூரி, தொண்டைமானாறு, உடுப்பிட்டி நூலகம், வல்லை, நாரந்தனை தெற்கு, நாரந் தனை நீரவழாங்கல் திட்டம், புளியங்கூடல், சரவணைச்சந்தி, சுருவில்- ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** மதவு வைத்த குளம், தவசிக்குளம், குட்செட் வீதி, தோணிக்கல், குளோப் அரிசி ஆலை, பண்டாரிக்குளம், வவுனியா இரண்டாம் குறுக்குத்தெரு, கார்கில்ஸ், ஹைட்ராமணி, தேக்கம், நானாட்டான் பிரதேச சபை, இசைமழைத்தாழ்வு, கட்டை அடம்பன், கற்கடந்த குளம், மடுவீதிச் சந்தி, மாயவராயர் கட்டையடம்பன், முருங்கன்விதைப் பண்ணை, மத்திய ஆயுர்வேத மருந்தகத்திற்கு அருகில், பூமலர்ந்தான், நீராவிபுரம், பண்ணை வெட்டுவான், பறயனாளங்குளம் சந்தி, பெரிய குஞ்சிக்குளம்- மாதக் கிராமம், பெரிய முறிப்பு, செட்டியார் கட்டையடம்பன், தொழில்நுட்பக் கல்லூரி- பண்ணை வெட்டுவான், தம்பனைக்குளம், தேக்கம் திட்டம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும். (நி)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நெருடலை உணருங்கள்

ஞானத்தின் மூலமாக மனத்தின் இயல்பு, மெய்யுணர்வின் இயல்பு ஆகியவைகளைத் தெரிந்து கொள்வதால் குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியின் விரிவான தோற்றத்தை ஏற்பதால் குற்ற உணர்வைக் கடந்து செல்லலாம்.

நெருடலை உணராமலே தவறுகளிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடியாதா? என்று இன்னொருவர் கேட்டார்.

ஸ்ரீஸ்ரீ: கற்றுக் கொள்ளல் என்பது அறிவாற்றல் சார்ந்தது. ஆனால் நெருடலை உணர்வது என்பது உணர்ச்சி நிலையினது. உணர்ச்சிகளினால் ஏற்படும் விளைவுகளை விட பலமானது. எனவே நெருடல் மீண்டும் தவறு நிகழ விடவே விடாது. (தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

சிலைக்கும் செம்புக்கும் அணிகலன்கள் அவசியமா?

முன்னிருந்த முடி மன்னர்களும் தனவந்தர்களும் தாம் அணிந்திருந்த அணிகலன்களைத் தெய்வச் சிலைகளுக்கு அணிவித்து எல்லோரும் கண்டு களிக்குமாறு செய்தார்கள். அணிகலன்கள் காட்சிப் பொருளே அன்றி உணவுப் பொருட்கள் அல்ல. ஒரு பெருந்தனவந்தன் விலை மதிக்கவொண்ணாத நவமணிகளாலான அணிகலன்களைத் தன் மனைவிக்குப் பூட்டி அலங்கரிப்பானானால் அவளை மற்றவர்கள் கண்டு களிக்கலாமா? அயலானுடைய மனைவியின் அலங்காரத்தைக் காண்பது முறையா? தனவந்தன்தான் காண உடன்படுவானா? எனவே, கண்ணால் மட்டும் காணக்கூடிய அணிகலன்களைத் திருப்பதி வெங்கடாசலபதிக்கும் திருவரங்கம் அரங்கநாதருக்கும் மதுரை மீனாட்சிக்கும் அரசர்கள் அர்ப்பணித்தார்கள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

64



கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்

**அட்டவணை 9**
**முகத்தல் (நீர்ம) வாய்ப்பாடு**

| | | |
|---|---|---|
| 360 நெல் | = | 1 சோடு |
| 5 சோடு | = | 1 ஆழாக்கு (168 மி.லி.) |
| 2 ஆழாக்கு | = | 1 உழக்கு (336 மி.லி.) |
| 2 உழக்கு | = | 1 உரி (672 மி.லி.) |
| 2 உரி | = | 1 நாழி (1.3 லீற்றர்) |
| 8 நாழி | = | 1 குறுணி (5.3 லீற்றர்) |
| 2 குறுணி | = | 1 பதக்கு (10.7 லீற்றர்) |
| 2 பதக்கு | = | 1 தூணி (21.5 லீற்றர்) |
| 3 தூணி | = | 1 கலம் (64.5 லீற்றர்) |

மீனம், புகை, பால், தண்ணீர், நெய், செலம், துள்ளி, துருவம், செவிடு, ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, பதக்கு, கலம், பறை, கரிசை என பல்வேறு முகத்தல் அளவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இன்றைய காலத்திலும் பயன்படுத்தும் முகத்தல் அளவைகள் என்பது, ஆழாக்கு, உழக்கு, நாழி போன்றவையாகும்.

அட்டவணை 9 மற்றும் 10 இல் உள்ள தகவல்கள் "தமிழர் அளவைகள்" என்னும் நூலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

**அட்டவணை 10 முகத்தல் அளவை**

| | |
|---|---|
| 1 தேக்கரண்டி | 4 மி.லி. |
| 1 குப்பி | 700 மி.லி. |
| 1 தீர்த்தக்கரண்டி | 1.33 மி.லி. |
| 1 நெய்க்கரண்டி | 4.0 மி.லி. |
| 1 உச்சிக்கரண்டி | 16 மி.லி. |
| 1 மேஜைக்கரண்டி | 16 மி.லி. |
| 1 பாலாடை | 30 மி.லி. |
| 1 எண்ணெய்க்கரண்டி | 240 மி.லி. |

**"பனை என் அளவும் கா என் நிறையும் நினையும் காலை இன்னொடு சிவணும்." - தொல்காப்பியம்.**

"பனை என் அளவும் கா என் நிறையும் நினையும் காலை இன்னொடு சிவணும்." என்று தொல்காப்பியத்தில் கூறப்படுகிறது. கிராமப் புறங்களில் கிணற்றில் இருந்து நீரினை மொண்டு கொள்ள குடம், வாளி போன்றவற்றுடன், பனையோலையால் செய்த பட்டை பயன்படுத்தியதை நாம் அறிவோம். இன்றும் சிலர் இதனைப் பயன்படுத்துகின்றனர். பனை ஓலையை வெட்டி மடித்து செய்யப்படும் பிளா இயற்கையான பனை, தென்னங் கள்ளினை குடிக்கப் பாவிக்கப்படுகிறது. இப்படி ஓலையை மடித்துக்கட்டி கிராமப் புறங்களில் இறைச்சி, வெள்ளரிப் பழம் என்பவற்றினை காவிச் செல்லவும் பிளா மாதிரியாகத்தான் பின்னப்படுகிறது.

பாத்திரங்களை அளவை யாகப் பயன்படுத்திய அக்காலத்தில் சோறு உண்ணவும், நீர் குடிக்கவும் பயன்பட்ட இப்பனங் குடை போன்ற அல்லது பனங்குடையினையே அளவையாகப் பயன்படுத்தியிருக்கலாம். இதனை "பிளா" என்று தொல்காப்பியர் சுட்டியிருக்கலாம் என்று கருத இடமுண்டு என்று "தமிழ் அளவைகள்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ளது.

**சாடி, பானை, வட்டில் அளவைகள்**

தொல்காப்பிய நூல் முழுமைக்கும் உரை எழுதிய இளம்பூரணர் சாடி, பானை, வட்டில், அகல் போன்றவற்றை முகத்தல் அளவைக் கருவிகளாக இயம்பியுள்ளார். இச் சொற்கள் தற்போது அளவைகளாகப் பயன்படா விட்டாலும், பாத்திரங்களாகப் பயன்பட்டதை அல்லது தற்போதும் பயன்படுவதை நாம் அறிவோம். 'வட்டில்' பற்றி "தமிழர் அளவைகள்" நூலில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. வட்டில் என்பது இடைக்காலத்திலும் பயன்படுத்தப்பட்ட ஒரு வகைப் பாத்திரமாகும். அன்று இது பாத்திரமா? அல்லது 'வட்டி' எனக் குறிப்பிடப்படும் இன்றைய பெட்டி வகையினதா? என்பது தெரியவில்லை. 'பெட்டி நிறைய நெல்' எனக் குறிப்பிட்ட பெட்டியைக் கணக்கிடுதல் போல் அன்று வட்டி என்னும் அளவை இருந்திருக்கலாம் எனக் கருதலாம். இதுபோலவே மற்றைய பாத்திரங்களும். ஆனால் இவை எவ்வளவு அளவு என்பது தெரியவில்லையென்று.

**பெய்தல் அளவை**

நெல் முதலியவற்றை படி, மரக்கால்களில் சொரிந்து அளப்பது பெய்தல் அளவை ஆகும். கொள்ளளவு என்ற நிலையில் முகத்தல் அளவையும் பெய்தல் அளவையும் பொருந்தமுறுகின்றன. ஆதால் பெய்தல் அளவையும் முகத்தல் அளவை என்றே கூறப்படுகிறது.

கடவுள் படியளந்தார் என்று பயன்படுத்துகிறோம். அந்தக் காலத்தில் வேலைக்குக் கூலியாக, பண்டமாற்று முறையில் ஒரு படி அரிசி, இரண்டு படி நெல் என்ற அளவில்தான் கொடுத்தனர். இன்றும், சில இடங்களில் படிக்கணக்கில்தான் அளந்து கொடுப்பார்கள். அவர்கள் அளக்கும் பொழுது எப்பொழுதுமே குவித்து வைத்து தான் அளப்பர். படியில் அளக்கும் பொழுது எப்பொழுதுமே குவிய குவியத்தான் அளப்பார்கள். ஆனால் எவ்வளவு குவிக்க வேண்டும் என்பது அவரவரின் விருப்பம் சார்ந்தது. எனவே, இதற்குச் சமமான கிலோ அளவு எவ்வளவு என்று காண்பது கடினமானது.

நீர்மப் பொருளைக் குவியக் குவிய அளக்க முடியாது. ஆனால் நெல், கடலை போன்றவற்றை அப்படி அளக்க முடியும். மேலும், அரிசி என்பதன் பருமனும், வேர்க்கடலையின் பருமனும் ஒன்றாக இருக்காது. அரிசி அதிக இடத்தினை அடைத்துக் கொள்ளும்.

அரிசியின் அடர்த்தியும், பருப்பின் அடர்த்தியும், அரிசிமாவின் அடர்த்தியும், வேர்க்கடலையின் அடர்த்தியும் வெவ்வேறானவை. மேலும், மாவினை அளக்கும் பொழுது இடையில் காற்று இடைவெளி அதிகம் இருக்காது, ஆனால் வேர்க்கடலையினை அளக்கும் பொழுது அதிக காற்று இடைவெளி இருக்கும். ஆகையால், முறையான கி.கி மாற்று இல்லை என்றே கூற முடியும். இதற்குப் பதிலாக, ஒரு படியில் எத்தனை மிளகு, எத்தனை அரிசி, எத்தனை துவரை விதை, எத்தனை அவரை விதை, எத்தனை பயறு, எள்ளு என்று எண்ணிக் கூறியுள்ளார்கள் நம் முன்னோர்கள். அதனை அட்டவணை 11 காட்டுகிறது.

ஆனால், இன்றைய நிலையில் அனைத்தையும் நாம் மரபணு மாற்ற விதைகள் மூலமாக விளைவிக்கிறோம். ஆகையால், அவர்களது எண்ணிக்கைக்கும் நாம் இன்று பயன்படுத்தும் தானியங்களின் எண்ணிக்கைக்கும் வேறுபாடு இருக்கும். அட்ட வணை 12 இல் காட்டப்பட்ட பெய்தல் அளவை வாய்பாடு "தமிழர் அளவைகள்" என்னும் நூலில் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 11**

| | |
|---|---|
| 1 படி அவரை | 1,800 அவரை |
| 1 படி மிளகு | 12,800 மிளகு |
| 1 படி நெல் | 14,400 நெல் |
| 1 படி பயறு | 14,800 பயறு |
| 1 படி அரிசி | 38,000 அரிசி |
| 1 படி எள் | 1,15,000 எள் |

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 23 பேர்...

அதன்படி இதுவரை யான காலப் பகுதியில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 15,369ஆக அதிகரித்துள்ளது. (ம)

## +942...

யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 607,104 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## முல்லை பாண்டி...

மேலும் செல்வபுரம் பாண்டியன்குளம் பகுதியைச் சேர்ந்த விமல் விக்னேஷ் (வயது-28) என்பவர் படுகாயமடைந்த நிலையில் மல்லாவி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் நெல் வெட்டும் இயந்திரம் ஏற்றி சென்ற உழவு இயந்திரத்தில் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. (ம-100,281)

## அல்வாயில்...

பாடு செய்யப்பட்டுள்ளது.

வெள்ளிருவை வீதி, அல்வாய் கிழக்கைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியரான ப.பூரானந்தன் என்பவரது வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி ஓய்வுபெற்ற ஆசிரியரும் அவரது மனைவியும் வீட்டில் இருந்ததாகவும், அவர்கள் வழமையாகவே அதிகாலை 4 மணியளவில் எழுந்து தமது கடமைகளை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை 4 மணியளவில் எழுந்து தமது கடமைகளை செய்து கொண்டு இருந்ததாகவும் பின்னர் ஆறு மணி அளவில் அலுமாரி திறந்து இருந்ததை பார்த்தே திருட்டு இடம்பெற்றமை தெரியவந்ததாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-60)

## இந்திய - இலங்...

களுக்கு இலங்கை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வாழ்த்துத் தெரிவித்திருந்தார்.

இலங்கை பிரதமரின் வாழ்த்துக்கு நன்றி தெரிவித்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

அந்தப் பதிவில் பிரதமர் மகிந்த ராஜபக்வுக்கு நன்றி. இரு நாடுகளும் சுதந்திரத்தின் 75 ஆண்டு மைல்கல்லை கொண்டாடும் இந்த ஆண்டு சிறப்பு வாய்ந்தது எனக் கூறியுள்ளார்.

அத்துடன் நம் நாட்டு மக்களுக்கு இடையிலான உறவுகள் மேலும் வலுப்பெறட்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம)

## பலரின் போலி...

தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

13ஆவது திருத்தம் எவ்வளவு ஆபத்தானது என்பதை மக்களுக்கு காண்பிப்பதற்காக எதிர்வரும் 30ஆம் திகதி பாரிய பேரணி ஒன்றை நல்லூரில் நடத்துகின்றோம். அதனை தடுத்து நிறுத்துவதற்கு பல சதிகள் நடைபெறுகின்றன. ஆனாலும் திட்டமிட்டபடி பேரணி நடைபெறும்.

மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற்று, அதனை 13ஆவது திருத்தத்துக்குள் முடக்குவதற்கு எத்தனிக்கும் தரப்புக்கு தான் இப்போது பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது எமது பேரணி.

நாங்கள் அதில் வெற்றி பெற்று இந்திய முகவர்கள் தமிழ் மக்களுக்கு செய்ய விருந்த கெடுதலை அம்பலப்படுத்துவோம். அதுதான் அவர்களின் பயம்.

அந்த வகையில்தான் நாம் தேர்தலில் போட்டியிடுவோம். ஏனைய தமிழ் தரப்புகள் 13ஆவது திருத்தத்தை ஆதரித்து மக்களை புதைகுழியில் தள்ளுவதற்கு முயற்சிக்கின்றனர்.

ஆனால் நாம் இந்த தேர்தலை எதிர்கொண்டு, 13ஆவது திருத்தத்தின் ஆபத்தையும், பலரின் போலி முகத்தையும் மக்களுக்கு அம்பலப்படுத்துவோம் என்றார். (ம-18,33)

## பயங்கரவாத...

இந்த வருடத்தின் முதலாவது இராஜதந்திர மாநாடு வெளிநாட்டு அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று [illegible] நடைபெற்றது.

இதன்போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

43 வருடங்களின் பின்னர் சர்வதேச நியதிகள் மற்றும் சிறந்த நடைமுறைகளுக்கு அமைவாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் திருத்தப்பட்டு வருவதாக அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் முக்கிய திருத்தங்களில் தடுப்புக் காவல் உத்தரவு, கட்டுப்பாட்டு உத்தரவு, நீதித்துறை மீளாய்வு உத்தரவுகளை வெளிப்படையாக அங்கீகரித்தல் தொடர்பான பிரிவுகளில் திருத்தங்களை மேற்கொள்ளுதல், நீண்ட கால தடுப்புக் காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக குற்றம் சாட்டப்பட்டவர்கள் மீதான வழக்குகளை விரைவாகத் தீர்த்தல், சுதந்திரத்துக்கு இடையூறு விளைவிக்கும் பிரிவுகளை இரத்துச் செய்தல் போன்றனவும் திருத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். (ம)

## நெருக்கடிகளி...

செய்துள்ளனர்.

நாடு எதிர்நோக்கும் பாரதூரமான நெருக்கடியை மக்களிடம் இருந்து மறைக்காமல் உண்மை நிலையை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என்றும் குறித்த கட்சித் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம)

## ஊடக...

இணைந்து இன்று யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர் சந்திப்பை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணம் தொடர்பில் மற்றுமொரு தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவறாகப் பிரசாரம் மேற்கொண்டு வரும் நிலையிலேயே இந்த ஊடகவியலாளர் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 10 மணியளவில் யாழ்.நகரிலுள்ள யு.எஸ். விடுதியில் இந்த ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெறவுள்ளது. (ம)

## கொரோ...

பின்பற்ற வேண்டும்."

இவ்வாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது,

"நாட்டில் கொரோனா சிகிச்சை நிலையங்களில் 6 ஆயிரத்து 25 கட்டில்கள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. எதிர்காலத்தில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பட்சத்தில் அதனைச் சமாளிக்கக்கூடிய வளம் உள்ளது.

நாட்டை மீண்டும் முடக்குவதை நினைத்தும் பார்க்க முடியாது. அவ்வாறானதொரு நிலைமை ஏற்படாமல் இருக்கப் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டும் என்றார். (ம)

## மூச்சுவிட சிரமப்...

யொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

சுதுமலை சாவல்கட்டில் நேற்றுக் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் ராஜேஸ்வரன் சியாரா (வயது -1) என்ற பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

### மெகா பவர்

திகதி 27/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1008
வெற்றி எழுத்து U | சுப்பர் இலக்க 10 | வெற்றி இலக்கங்கள் 38 41 53 78
மெகா அதிர்ஷ்ட இலக்கம் 0 6 3 2 4

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 001
இடபம் | வெற்றி இலக்கங்கள் 05 08 11 20 | இடபம்
தேசிய லொத்தர் சபை

### செவண

திகதி 27/01/2022
சீட்டிழுப்பு இலக்கம் 351
ஆங்கில எழுத்து B | வெல்லப்பட்ட இலக்கங்கள் 39 70 71 92
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

### மஹஜன சம்பத

திகதி 2022/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 4660
ஆங்கில எழுத்து J | வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 3 8 8 3 8
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 27.01.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2955
ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கங்கள் 44 58 64 79
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2022.01.27
சீட்டிழுப்பு இலக்கம் - 690
ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கங்கள் 06 44 74 76
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1637 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 27.01.2022 | தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் W 02 17 21 42
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 56,530,993/=
அபிவிருத்தி லொத்தர் சபை

### சனிதா Shanida

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.01.27
சீட்டிழுப்பு இல: 3798
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,978,300/-
வெற்றி இலக்கங்கள் 22 24 52 73 | ஆங்கில எழுத்து Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி அதிர்ஷ்டம்

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,636,906/=
திகதி 27.01.2022
வெற்றி வாரம் 3349
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 03 38 52 57 | மிதுனம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,472,520/=
அபிவிருத்தி லொத்தர் சபை

### 12 லக்ன

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I | 21 (சுப்பர் இலக்கம்) | 09 45 50 51
சீட்டிழுப்பு வாரம் 813
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2022.01.27 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 207,782,143/-
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### සංවර්ධන වාසනාව

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
திகதி : 2022-01-27
வெற்றி வாரம் : 480 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.12,957,876/-
ஆங்கில எழுத்து G | வெற்றி இலக்கங்கள் 16 10 17 | விதி எண் 6
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,135,740/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.13,061,356/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### அத கோடிபதி ADA KOTIPATHI

வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1463
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.01.27
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,856,980/-
வெற்றி இலக்கங்கள் 13 21 36 71 | ஆங்கில எழுத்து U
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

உரும்பிராயில் உள்ள பலசரக்கு கடைக்கு வேலையாட்கள் தேவை.

ஆண்கள் : வயது (20-26) பெண்கள் : வயது (19-28)
சம்பளம் - 25,000/= - 30,000/= சம்பளம் - 15,000/=

(C-3654)

✆-077 334 4700

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9875)

076 825 7716 (ஆகாஸ்)

---

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணத்தில் இருந்து நுணாவில் செல்லும் A9 பிரதான வீதியுடன் 2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- நிலப்பரப்பு
- கைதடி பிள்ளையார் கோயிலில் இருந்து 500 மீற்றர் தூரம்

பார்வையிடும் நேரம்:-
காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
தரகர் தேவையில்லை, விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

(9874)

077 814 7389, 077 614 7333

---

## வேலை வாய்ப்பு

கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, வவுனியா, மன்னார், யாழ். மாவட்டங்களில் எமது நிறுவனங்களை மேம்படுத்துவதற்கு தரமானவர்கள் தேவை!

**விண்ணப்பிக்கக் கூடியவர்கள் :**

- 50 வயதிற்கு மேற்பட்ட MBA, BBA பட்டதாரிகள்.
- Security Service நிறுவனம் ஒன்றை வழிநடத்தக் கூடியவர்கள்.
- அரச, தனியார் வேலைகளில் இருந்து ஓய்வுபெற்ற உயர் அதிகாரிகள்.
- பொருளாதார பேராசிரியர்கள்.

**சம்பளம் : பேசித் தீர்மானிக்கப்படும்.**

### வாடகைக்கு வேண்டும்

சுன்னாகம், மல்லாகம், இணுவில், மானிப்பாய், உடுவில் பகுதிகளில் அலுவலகமாக பயன்படுத்த உகந்த வீடுகள் வேண்டும்.

(9857)

+9477 795 0439
0041 79 334 4733
+9477 544 2370

---

## முதலீட்டாளர்கள் தேவை

வளர்ந்துவரும் IT நிறுவனம் ஒன்றின் சேவைகளை விஸ்தரிக்க முதலீட்டாளர்கள் தேவை.

தொடர்பு (9868)

070 700 3109

---

## காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (9873)

தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

---

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதான 4 இல் செவ்வாய் உள்ள உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை.தொழிலற்ற மணமகள் விரும்பத்தக்கது. சீதனம் எதிர்பார்க்கப் படவில்லை. (9872)

075 169 7285

---

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-975/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய்
- நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி
- பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி

(C-3577)

✆ 0768226240 DHL


# ஜெய்சங்கருக்கு கொரோனா

இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தனது டுவிட்டர் பதிவில் அவர் இதனை அறிவித்துள்ளார்.

அந்த பதிவில், "கோவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில் தொடர்பு கொண்ட அனைவரையும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார். (ம)


## வேலை வாய்ப்பு

- முன்பள்ளி ஆங்கில, தமிழ், கணித ஆசிரியர். [முன்பள்ளி Diploma முடித்தவர்கள்/ பழக விரும்புபவர்கள்]
- சிங்கள எழுத்துப் பயிற்சி ஆசிரியர்.
- ஆடல், பாடல் தெரிந்த அறிவுசார்ந்த கல்வியை ஊட்டுபவர்கள் அனுபவமுள்ளவர்கள் மட்டும்.
- முன்பள்ளி இணைப்பாளர்.
- MS Office, Photoshop தெரிந்தவர்கள்/ பழக விரும்புபவர்கள்
- VTA நிறுவனத்தில் முன்பள்ளி Diploma முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தமிழ், ஆங்கில, கணித ஆசிரியர்கள் முன்பள்ளி Diploma கற்கை நெறியுடன் பணியாற்ற முடியும்.**

நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி : 30.01.2022 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி - 12.00 மணிவரை நடைபெறும்.

- மல்லாகம், தெல்லிப்பளை, இணுவில், சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களுக்கு ஆட்கள் தேவைப்படுகின்றனர்.
- நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கும்போது உரிய ஆவணங்களுடன் வருகைதருதல் வேண்டும்.

(9870)

நேர்முகத் தேர்வுக்குரிய இடம்
**Little Masters' Montesoori**
கே.கே எஸ் றோட், மல்லாகம்.
தொடர்புகளுக்கு : 077 377 0524

---

## கம்பிநெற் கூடுகள் விற்பனைக்கு

கோழி, முயல், புறா வளர்க்கக்கூடிய இரும்புநெற், பொக்ஸ்பார் போன்றவற்றால் தயாரிக்கப்பட்ட கூடுகள், காவலாளிக் கூடு போன்ற பொருட்கள் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு
V.S.K கட்டடப் பொருள் வாணிபம், சாவகச்சேரி.
[அருள் ஹோட்டல் முன்பாக]

(C-3655)

✆-077 649 1027


## 1 ஆம் வருட சிரார்த்த தினம்

அமரர்

## சுந்தரலிங்கம் நிருத்திகன்

(அபிவிருத்தி உத்தியோகத்தர் - NEDA)

[திதி – ஏகாதசி]



உறவென்று உணர்வுகள் தந்தாய்
உரிமையாய் வரவுகள் தந்தாய்
தனியாய் கடவுளிடம் சென்றாய்
தவிக்கின்றோம் உன்னை நினைத்து
ஆண்டொன்றில் எங்கள்
நினைவஞ்சலியாய்....

"கீர்த்தனம்" அல்வாய். (9869) குடும்பத்தினர்


## அகரம் உயர் நிலைக் கல்லூரி

AHARAM HIGH STANDARD COLLEGE

காங்கேயன் துறைச்சாலை

மல்லாகம் | கொக்குவில்

**புதிய கல்வியாண்டு – 2022 ஆரம்பம்**

தரம் 06 – O/L
வரையான தமிழ் மொழி மூலம்
English medium வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(22.01.2022 இல் புலமைப்பரிசிற் பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான புதிய தரம் 06 தமிழ்மொழி மூல English medium வகுப்புக்கள் ஆரம்பம்

04.02.2022 [வெள்ளிக்கிழமை]
வளர்பிறை விநாயக சதுர்த்தி அன்று காலை 6.35 - 8.05 வரையான சித்தயோக நன்நாளன்று

(9833)

அனுமதிகளை 26.01.2022 மாலை 02 மணியில் இருந்து பெற்றுக்கொள்ளமுடியும்.

"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"
இயக்குநர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.